காணவேகெந்திபாஷாணஞ்சொல்வேன் கருவானகெந்தியடாபடிககெந்தி, பூணவேநிர்மலமாங்கெந்திவாங்கி புகழானதாரமுடன்விரம்லிங்கம், பேணவேவெள்ளையுடன்காரங்கூட்டி பெருமையுடனறுசறக்கும்பொடித்துக்கொண்டு, தோணவேகாசியிடகுப்பிக்கெந்தி சுத்தமுடன்சருகெருவுசாம்பல்செய்யே. (௬௬௩)

செய்ததொருசாம்பல்தனைபாண்டத்திட்டு சிவசிவாகுப்பிதனைநடுவேவைத்து, கொய்ததொருமூக்களவுசாம்பலிட்டு கூர்மையுடனடுப்பேத்திஅனலைத்தாக்கிக், கைதவறுமனதாகக்கருவாய்ப்பார்த்துக்கருணையுடனுருகுபதந்தன்னைக்கண்டு, கொய்தமுடன்தானெடுத்துகுளிரவைத்துகூர்மையுடன்பார்த்திடவேகட்டும்பாரே. (௬௬௪)

கட்டிநின்றகெந்திபாஷாணம்வாங்கி கனகமென்றதங்கமதில்பத்துக்கொன்று, திட்டமுடன்தான்குடுத்து உருக்கிப்பார்த்தால் சிவசிவாதங்கமதுகுருவாய்நிற்கும், சட்டமுடன்குருவெடுத்துவெள்ளிசெம்பில்தாக்கிமிகஉறுக்கிமாத்ததுதான்பத்தாகும், யிட்டமுடன்தானறிந்துகுருவைப்போத்தியேகாந்தபாஷாணவைப்புப்பாரே. (௬௬௫)

பாரப்பாபாஷாணம்வைக்கும்போது பத்தியுடன்குப்பிதனக்கங்கிபூட்டி, நேரப்பாரவிதனிலேகாயவைத்துநேர்மையுடன்சருகெருவைசாம்பல்பண்ணி, சாரப்பாகுப்பிவைத்துயெடுப்பாய்மைந்தா சந்தேகமில்லையடாதனதாய்ப்பாரு, ஆரப்பா அறிவார்கள் பாஷாணவைப்புஅறிந்தவனேசிவயோகிஆதிதானே. (௬௬௬)

அரிதாரபாஷாணவைப்பு.

ஆதியென்றகெந்திபாஷாணஞ்சொன்னேன்அரிதாரபாஷாணமருளக்கேளு, நீதியுடனரிதாரந்தகடாய்வாங்கி நேர்மையுடனதுக்குநிகர்துரிசிதுத்தஞ், சாதியென்றகெந்தியடவீரங்காரம்சங்கையுள்ளசெ

வுரியுடசாரங்கூட்டி, பேதியென்றயெழுசரக்குமொன்ருய் மைந்தா பெருமையுடன்தான்பொடித்துக்குப்பிக்கேத்தே. (௬௬௭)

ஏத்தமுள்ளகுப்பிதனக்கங்கிழூட்டி யின்பமுடன் முன்போலே வைத்துகார்த்து, பார்த்திபனேபதங்கண்டுயிறக்கிப்பார்க்கப்பதிவா னசறக்கெல்லாங்கட்டிநிற்குஞ், சாத்தியதோரறிதார பாஷாணத்தை தங்கமதுபத்துக்குஒன்றுதாக்கி, போத்திமிகத்தானுருக்கிப்பார்த்தா யானல்புண்ணியனேதங்கமதுகுருவாம்பாரே. (௬௬௮)

பாரப்பாதங்கரதிகுருவைமைந்தா பக்குவமாய்வெள்ளியிலேநூ த்துக்கொன்று, நேரப்பாதான்குடுத்துஉருக்கிப்பாரு நிசமானவெள் ளிதங்கமாகுமய்யா, காரபபாதங்கமதுஉலகுக்கெல்லாங் கருணையுள் ளதெய்வமதாய்நின்றுதப்பா, பேரப்பாயிதுவெல்லாம் சத்தேயாகும் பெரிதானதங்கமென்றதீபந்தானே. (௬௬௯)

நாகரசபாஷாணவைப்பு.

தங்கமென்றனுகரசபாஷாணத்தை தண்மையுள்ளபுலத்தியனே சொல்லக்கேளு, அங்கமுடன்பழச்சாத்தில்சூடன்போட்டு அப்பனே தான்களைத்துசூதம்விட்டு, சங்கையுடனடுப்பேத்தி யெரிக்கும்போ துசணத்திலேசூதமதுவாலையாகும், பங்கமில்லாவாலேதனைவைத்துக் கொண்டுபத்தியுடனுகமதைசுத்திபண்ணே. (௬௭௰)

சுத்திபண்ணவகையேதுயென்ருயானல் சுகமானகாரெள்ளுத்த யிலத்தாலே, பத்தியுடன்தானுருக்கிப் பழச்சாத்துள்ளே பாச்சுவாய் அஞ்சுமுறைபண்பாய்மைந்தா, சுத்தமுடன்அஞ்சுதிரம் உருக்கிச்சா ய்த்துதீற்கமுடன்பின்பொருக்கால்உருகும்போது முத்தியுள்ளவாலை தனேசேர்த்தால்மைந்தாமுற்கமுடன்நாகாசமொன்ருய்க்காணே. ()

ஒன்ருனநாகரசந்தனக்குமைந்தா உண்மையுடனதுக்கநிகர்கெந் திகூட்டி, நன்ருனலிங்கமுடன்விரம்வெள்ளை நலமானகெவுரியுடன் காரஞ்செய்து, குன்ருமல்யெண்சரக்கும்பொடியாய்ப்பண்ணி குப்பி யிலேதானடைத்துமுன்போலமைந்தா, அண்டபிரான்தனைத்தொழு துயெடுத்துப்பார்க்கஆதியென்றநாகபாஷாணமாமே. (௬௭௨)

ஆமப்பாநாகபாஷாணந்தன்னை அருளானதங்கமதில்பத்துக்கொ ன்று, தாமப்பாதான்குடுத்துஉறுக்கிப்பார்க்க தண்மையுடன்தங்கம துகுருவாய்நிற்கும், ஓமப்பாயேமமதுகுருவாய்ப்போனல்உத்தமனே வெள்ளிசெம்பிலனந்தம்வேதை, காமப்பால்கானற்பால் கருவினலே கண்ணடங்காவேதைமுறைகாணலாமே. (௬௭௧)

கெந்தகசெந்தூரம்.

காணவேயின்னமொருகருமானங்கேள்கருவானகெந்தகயோர்பலந்தான்வாங்கி, பேணவேகாண்டியிலேநெய்யைக்குத்திப் பெருமையுள்ளகெந்தகத்தையுருக்கிக்கொண்டு, தோணவேரசமதிலேவிட்டுக்கிண்டசுத்தமுடன்தான்மடிந்துதூளாய்ப்போகும், பூணவேயப்பொடியைவாங்கிமைந்தாபுத்தியுடனதுக்குநிகர்லிங்கஞ்சேரே. (சூஎச)

லிங்கமுடனரிதாரம்வீரங்காரம்நேர்மையுடன்தான்கூட்டிக்கல்வத்திட்டு, பங்கமில்லாபொத்தலையின்சாற்றாலாட்டிபத்தியுடன்உருட்டியொருவட்டாய்ப்பண்ணி, அங்கமுடனோட்டில்வைத்து சீலைசெய்துஅப்பனேநிதானமதாய்ப்புடத்தைப்போடு, சங்கையுடன்புடமாறியெடுத்துப்பார்க்கதங்கநிறஞ்செந்தூரமாகும்பாரே. (சூஎரு)

பாரப்பாசெந்தூரமதிககாந்திபணவிடைதான்வெள்ளியிலேபத்துக்கொன்று, காரப்பாதான்குடுத்துஉருக்கிப்பார்க்க கயிலாசவெள்ளையதுபழுத்துப்போகும், நேரப்பாபழுத்துநின்றதீபம்பார்த்துநேர்மையுடன்சிவயோக நிலையில்நின்றால், ஆரப்பாஉனக்கிடு சொல்லப்போறேன்ஆதிதிருசெந்தூரமருமைதானே. (சூஎசா)

அண்டச்செயநீர்.

அருமையுடனின்னமொருகருவைக்கேளுஆதியண்டச்செயநீரினருமைதன்னை, உருமையுடன்சம்பழத்தின்சாறுவாங்கி உத்தமனேபீங்கானில்விட்டுக்கொண்டு, வருமையதுதானகலசினக்காரமாற்கமுடன்தான்பொடித்துசாத்தில்கொட்டி, கருமையெனநின்றதொருஞானியண்டங்கருத்துறவேவாங்கியதிலமுத்துவாயே. (சூஎஎ)

அமர்த்திநின்றமுட்டைதனைமருனாள்பாற்க அரகராதோடுருகிசுன்னமாகுஞ், சுமத்திநின்றசவ்வுடனேமஞ்சள்வெள்ளை சுகமாகத்தானெடுத்துஅதனோடொக்க, விமத்தநவச்சாரமுடன் துருசுரெண்டும்விபரமுடன்களஞ்சிரெண்டுகூடப்போட்டுச், சமத்தாகதானரைக்கும்போதிலேதான்சங்கையுடன்மெழுகாகும்பதனம்பண்ணே. (சூஎஅ

பதமாகத்தோடுருகிநின்றசுன்னம்பக்குவமாய்த்தானெடுத்துஅதினோடொக்க, சதமானசாரமது கழஞ்சிரெண்டு தப்பாமல் போட்டொருநாள்வெய்யில்வைத்தால், விதமானமெழுகாகு மைந்தாமைந்தாவிபரமுடனிருமெழுகுமொன்றாய்க்கூட்டி, சுதமாகக் கல்வமதில்அரைக்கும்போதுசொலிக்குமடாநீரதனில்சுகமாய்ப்பாரே. (சூஎகூ)

பாரப்பா அன்னீரைவாங்கிமைந்தா பக்குவமாய்சரக்குகளேசுருக்குத்தாக்கு, வீரப்பாகொண்டதொருசரக்கையெல்லாம் விண்ணடங்கக்கட்டுமடாமெய்தான்பாரு, காரப்பாயிரும்பதனைத்தகடாய்த்தட்டிகருணையுடனன்னீரில்துவைத்துமைந்தா, நேரப்பாபுடம்போட்டுப்பார்த்தாயானல்நின்றதொருசெம்பதுபோலுருகும்பாரோ. (௬௮௰)

உருகிநின்றஅண்டநீர்தன்னில்மைந்தா உத்தமனேஅரப்பொடியுங்களஞ்சிசேர்த்து, பருவமுடன்தானரைத்துக் குகையில்வைத்துபக்குவமாய்தானுருக்கசெப்பாம்பாரு, கருணையுள்ள செம்பதனைவெள்ளிக்கியந்தால்கருத்துறவேஆறேழுவயதாம்பாரு, அருமையுள்ளசெயநீர்தான்அண்டநீரு அப்பனேமனதுருமையாகச்செய்யே. ()

லிங்கக்கட்டு.

செய்யடாயின்னமொருகருமானங்கேள் சிவசிவாகெந்தகமுந்தாரங்கூட்டி, நெய்யவேகாண்டிதனிலுருக்கிக்கொண்டுநல்லதொருலிங்கமடாதன்னைவாங்கி, மெய்யடாஉருகுநீர்தன்னில்போட்டுமேன்மைபெறவாட்டியெடுலிங்கங்கட்டும், பொய்யடாபோகாதுயிருகிக்கட்டும் புண்ணியனேதானெடுத்துவைத்துக்கொள்ளே. (௬௮௨)

கொள்ளப்பாவெடியுப்புஅஞ்சாங்காச்சல்கிருபையுடனதுக்குநிகர்கூடஞ்சேர்த்து, வள்ளப்பாவாய்நீராலரைத்துருட்டி மைந்தனேபுடம்போடக்கட்டும்பாரு, தாளப்பாலிங்கமுடன்கூடச்சேர்தது தண்மையுடன்வாய்நீராலரைத்துருட்டி, சூளப்பாஓட்டில்வைத்துப் புடத்தைப்போடசுத்தமுடன்கட்டியதுகளங்குமாமே. (௬௮௩)

களங்கமத்தகளங்கதனையெடுத்துக்கொண்டுகளீம்பானசெம்புதனில்நூத்துக்கொன்று, விளங்கவேதான்குடுத்து உருக்கிப்பாருவேதாந்தசெம்பதுவுமீராறுருகும், களங்குவிந்துவாசியின்மேல் சார்ந்துக்கொண்டுசாதகமாய்ப்புருவனடுச்சுழியிலேறி, உளங்கனியஅண்டகேசரியைப்பாருஉண்மையுள்ளதீபமடாசோதியாமே. (௬௮௪)

நாகரசவங்கக்குரு.

ஆமப்பாநாகரசம்வங்கமூன்றும்அப்பனேஓரிடையாயொன்றாய்ச்சேர்த்து, தாமப்பாகல்வத்தில் பொடித்துக்கொண்டு சங்கையுடன்கெந்தகத்தின்தயிலமூட்டி, ஓமப்பாதானெடுத்துகல்வத்திட்டு உத்தமனேதுருசுடனேதாரம்வீரம், வாமப்பால்தன்னாலே கல்வத்தாட்டிமாற்கமுடன்வழித்துருட்டிகாயப்போடே. (௬௮௫)

காய்ந்ததொருவட்டதனையெடுத்துக்கொண்டு கருணையுடன்பாண்டமதில்சாம்பலிட்டு, பாந்தமதாய்வில்லேவைத்து மேலும்போட்டு பத்தியுடனடுப்பேத்திஅனலேத்தாக்கி, சாந்தமாய்அனலேறியிருகிக் கட்டும்சங்கையுடன்கட்டினதைப்பதனம்பண்ணி, மாய்ந்துவிடக்கல்வமதில் பொடியாய்ப் பண்ணிமாற்கமுடன் பொற்றலையா லாட்டிக்காணே. (௬௮௬)

காணவேபொற்றலைநீர்தன்னுலாட்டி கருத்துறவே வழித்துருட்டிகாயப்போட்டு, பூணவேவோட்டில்வைத்து சிலேசெய்து புத்தியுடன்புடம்போடக்குருவாய்நிற்கும், பெணவேகுருவதனை யெடுத்துக்கொண்டுபிலமானதங்கமதில்தடவிமைந்தா, தோணவேநிலமறவில்புடத்தைப்போடுசோதியுள்ளதங்கமதுகுருவாம்பாரே. (௬௮௭)

குருவானதங்கமதையெடுத்துக்கொண்டுகூர்மையுடன்செம்பதனில்தூத்துக்கொன்று, கருவாகத்தான்குடுத்துஉருக்கிப்பாருகருணையுள்ளசெம்பதுவும்பத்துமாத்தாம், பருவமுடன்வெள்ளியிலேபதினுருகும்பாலகனேகுடவனிலேபதித்துப்பார்த்தால், திருவானபொன்வயதுயிராருகுஞ்சிவசிவாதிறிவங்கச்செயல்தான்பாரே. (௬௮௮)

அங்கசூட்சம்நீர்.

பாரப்பாவங்கமென்றுலங்கமாகும் பதிவானஅங்கமதின்சூட்சம்கண்டு, சாரப்பாவாசியிலேசார்ந்துக்கொண்டு தயவானருத்திரனார்பதியில்சென்று, மேறப்பாஅண்டபதம்உச்சிமீதில்மெய்ஞ்ஞானமனோன்மணியைகண்டுபோற்றி, சேரப்பாஅவள்பதமே கெதியென்றெண்ணிசிவசிவாஅந்திடத்தில்திறமாய்நில்லே. (௬௮௯)

திறமானவாசியடா மூலசூட்சந் தியானஅக்கினியாஞ் சுடராஞ்சோதி, உறமானசோதியடாசுவாசத்தந்தம் உத்தகலைக்கியானமடாஉச்சிவீடு, பரமானவீடதுதான்அகண்டவீடுபார்மகனேஅதனிலொருசூட்சமுண்டு, வறமானசூட்சமதுயென்னவென்றால் மகத்தானமதியமூர்தந்தாரையாமே. (௬௯௰)

ஆமப்பாதாரையுடன்சக்குநாதம் அருளானசெயகண்டிமணியினேசை, தாமப்பாபேரிகையும்வாருதியினுதம் சகலகலைநாதமென்றசெகனுதந்தான், வாமப்பாலுண்டுதிருவாசியேரி மகத்தானபூரணமாயறிவில்நின்றால், ஓமப்பாஆகாசமானகாதில் ஒருகோடிபேதமுள்ளநாதமாமே. (௬௯௧)

நாதமென்றசத்தமடா உதிக்குமுந்தி நயனவொளிபார்வையடா கந்தியாட்டம், நீதமென்ற ஆட்டமடா சக்கரத்தின்சுத்துநிலையானசுத்ததுதான்வாசிநேர்மை, சூதமென்றவாசியடா ஞானக்கண்ணு துலங்குகின்றசிந்தையடா அறிவானந்தம், பேதமெல்லாம் அந்தமென்ற அறிவின்கண்ணால்பிண்டத்தையுண்டத்தைபேசலாமே. (௬௬௨)

பேசவொண்ணா அந்தரங்கச்சுழியில்நின்று பிலமானருத்திரனார் சிகாரவிட்டில், நேசமுடன்வாசியினால்சிம்றிங்கென்று நேமமுடன் அண்டகேசரத்தைப்பார்த்தால், வாசமுள்ளகற்பூரதீபந்தீபம்மகத்தான சோதியடாமனக்கண்ணாற்பார், மாசத்தமரகதம்போல் கண்ணில்காணும்மகத்தானசத்தியெனவணங்குவாயே. (௬௬௩)

வணக்கமுள்ளபருதியடா மூலவன்னிமகத்தானமதியதுவுமண்டத்துச்சி, இணக்கமுடன்பருதிமதிஒன்றாய்ச்சேர்த்து யிருந்துதடா ருத்திரனார்யிருதயத்தில், தனக்குருதியானநடு வீட்டுக்குள்ளே சகலகலைக்கியானமென்றதீபமொன்று, உனக்குள்நின்று இணக்கமுடன்வணங்கிப்பார்த்தால்ஒன்றுமில்லையெங்குஞ்சிவமயமதாமே. (௬௬௪)

மயமானசிவமயமேஉலகசங்கமாயமென்றமாயமடா உலகவாழ்வு, நயமானஉலகமதில்வாழ்க்கைதன்னை நாட்டமுடன்கண்டறிந்துநயனமேவி, செயமானபராபரமேகெதியென்றெண்ணி தீற்கமுடன்பூரணத்தில்திறமாய்நின்றால், சுயமானசிவகலைதானேதானாய் துலங்குகின்றசோதியடா ஆதிதானே. (௬௬௫)

ஆதியென்றபஞ்சகற்தாள்ஒன்றோடொன்று அறியாமலவறவர்கள்ஆண்மையாலே, நீதியுடன் அசைவதனை அறிந்துக்கொண்டுநின்றார்கள்போரவழிதன்னைநோக்கி, வீதியுடன்போரவழி தன்னிலேதானமெய்யான அக்கினியார்தாண்டப்போகா, வாதியென்றபிரிதிவியு அப்புலொண்டுமடிந்து அந்தமூன்றுமடாவழியொன்றாச்சே. (௬௬௬)

ஒன்றானவழியதுதான் அண்டத்துச்சி யுகமுடிந்துபோனயிடம்மதுதானப்பா, நன்றாக அந்திடத்தைசென்றாயானால் நானுமில்லைநீயுமில்லைரெண்டுமொன்று, நின்றாடும்வாசியிலேகண்ணோட்டம்பார்நேர் பிரிந்துபோகாமல்நிலையில்நில்லு, குன்றாமல்நிலைதனிலேநிற்கும்போதுகுறியானசின்மயம்விண்மயமதாமே. (௬௬௭)

விண்மயமுந்தன்மயமும்மொன்றாய்ப்பாரு வேதாந்ததேகமதுசுடர்போல்காணும், தன்மயமேவிண்மயமாயாகுங்காலம்சகலபரிபூரண

முந்தானேதானாய், சின்மயமுந்தானாகஉண்மையானால் சிதம்பரமும் பராபரமும்தெரிசிப்பாய்நீ, கன்மயமேயல்லாது வேறொன்றில்லைகண்மறைந்தாலொன்றுமில்லைகண்ணைப்பாரே. (௬௬௮)

பாரப்பாகண்தானேஞானமாச்சு பறமானசிவகலையதுதானாச்சு நேரப்பாசிவயோகமதுதானாச்சுநிலையானபூரணமுமதுதானாச்சு, காரப்பாதிசதிட்சையதுதானாச்சுகலையானரவிமதியுஞ்சுடருமாச்சு, மேரப்பாகண்மயக்கங் கண்டபோதே மேலான சிவகளைபோச் சென்றெண்ணே. (௬௬௯)

எண்ணுவதும்உண்ணுவதுங்கண்தான்மைந்தா யேகபராபரமானசோதிக்கண்ணை, தன்னுடையகுருவென்றேவணங்காமல்தான் தரணிதனில்கோவில்குளந்தன்னில்சென்று, பண்ணுதிருப்பணிகள்சுத்தினதிகள்மூழ்கிபசித்திருந்துஉடலொறுத்துமதிமயங்கி,கண்ணுமிருகண்புகைஞ்சிகளையுமங்கிகாமவலைக்குள்ளாகிக்கண்கெட்டாரே. ()

கண்கெட்டுகளைமயங்கிபோவதற்கோ காமவலைதனில்முழுகுங்கசடரேகேள்,புண்பட்டுமுழித்ததினால்தன்னைவிட்டுபுத்தியுடனாதியென்றசத்தத்தேகி, நண்புற்றஅகாரமடாஅமுர்தகெங்கைநன்மையுள்ளகெங்கையிலேநயனசுத்தி, பண்பட்டுநயனமதை சுத்திபண்ணிபரமகயிலாசவரைபார்த்துநில்லே. (௭௱௧)

நில்லென்றநிலையதுதான்கண்மூக்கப்பா நெத்தியென்ற புருவமடாஉச்சமாச்சு, சொல்லென்றசத்தமடாமவுனமாச்சு சோதியென்றதீபமடாஞானமாச்சு, செல்லென்றவாசியடாயோகமாச்சு திருவானஅமுர்தமடாபானமாச்சு, உள்ளென்றஅறிவல்லோபூரணமாய்நின்று யுகமுடியும்போதில்கண்ணாலோடிப்போமே. (௭௱௨)

ஓடிமனமலையாமல்பஞ்சபூதமுண்மையுள்ள சரக்குகளைச்சொல்லக்கேளு, வாடிமனந்திரிந்ததினாலேதுண்டப்பா மகத்தானகாவியத்தைமகிழ்ந்துபாரு, நாடிமனம்நிலைப்பதற்குச்சொல்வேனிந்த நாதாந்தஉபரசமுங்காரசாரஞ், சூடிநின்றபாஷாணம் நவலோகங்கள் சுத்தமுடனேவகையாய்சொல்லக்கேளே. (௭௱௩)

கேளப்பாபிரிதிவுதான்தங்கமாச்சு கெடியானஅப்பதுதான்காரீயமாகும், சூளப்பாதேய்வதுதான்செம்பேயாகுஞ் சுகமானவாய்வதுதான்பிரும்புமாச்சு, மேலப்பாஆகாசம்நாகமாச்சு மேன்மையுடன்யினமறிந்துகூட்டினக்கால், கோளப்பாயில்லாதகுருவாய் நின்றுகுறியானதிரிகரணசுத்தியாமே. (௭௱௪)

அய்ம்பூதசரக்கு.

ஆமப்பாயின்னமுமேசொல்லக்கேளு அதிகாரசாரமதின் அன்னபக்கேளு, ஓமப்பாபூமியுப்புயிந்துப்போடு உரிசையுள்ளகல்லுப்பு வளையலுப்பு,தாமப்பா அப்பதுவுஞ்சாரமாச்சுசத்தியுடச்சாரமெவாச் சாரமாச்சு, காமப்பாதேய்வதுவும்சவுட்டுப்பாச்சு கடியதொருவெடியுப்புகற்பூரந்தான். (௭௱௫)

தானனவாய்வதுதான்துருசுமாச்சு சங்கையுள்ளவெண்காரஞ்சினக்காரம், கோனனஆகாசம்கற்பூரம்வழலைகூர்மையுடன்பூதவகைக் குறித்துப்பார்த்து, நானனதத்துவத்தைநிறுத்திமைந்தாநன்மையுள்ளநாட்டமதாய்னடிப்பார்த்தால்,ஊனனதேகமதுஉறுதியாகும்உத்தமனேபாஷாணமுகந்துகேளே. (௭௱௬)

கேளப்பாபிறிதிவுதான்தாரமாகுங் கிறுபையுள்ள தண்ணீர்சவ்விரமாச்சு, நாளப்பாதேய்வதுதான்லிங்கமாச்சு நலமானவாய்வதுதான்வெள்ளையாகும், மேலப்பா ஆகாசம்கெந்தியாச்சு மேன்மைபெறஅஞ்சையுமேஅறிந்துக்கொண்டு,சூளப்பாயினமறிந்துவேதைபார்த்தால்துன்பவினையொன்றுமில்லைநன்மைதானே. (௭௱௭)

நன்மையுள்ளஉபரசத்தில்பஞ்சபூதம் நாட்டமுடன்சொல்லுகிறேன்கேட்டுக்கொள்ளு, உண்மையுள்ளபூமியதுகாந்தமப்பிரகம் உத்தமனேசலாசத்துபூனகந்தான், தண்மையுள்ளஅப்பதுதான் சங்குநண்டுதயவானநத்தையொடுகிளிஞ்சியாகும். பெண்மையுள்ள தேய்வதுதானிமிளையோடு பேருனமேலுமிந்திரகோபந்தானே. (௭௱௮)

தானனவாய்வதுதான்சாஸ்திரவேதி சங்கையுள்ளகல்னர்கல்மதமுமாகும், வானனஆகாசந்துத்தம்அயக்காந்தமாற்கமுள்ளரசிதபாஷாணமாச்சு, தேனனஉபரசத்தில்பஞ்சபூதம் சிந்தைமனதறிவாலே கண்டுகொண்டு, கோனனகுருவருளால்வேதைபாரு குறியானபுருவமதில்கூர்ந்துபாரே. (௭௱௯)

பாரப்பாயினமறியபஞ்சபூதம் பக்குவமாய் தானறிந்துதன்னைப் பாரு, நேரப்பாநிலையறிந்துகாலையூனு நிலையானஅண்டகேசரியைப் பாரு, மேரப்பாஅண்டகேசரியைப்பார்த்து வேதாந்தபூரணத்தைவிரும்பிக்கொள்ளு, காரப்பாசதாகாலமறிவாய்நின்று காலறிந்துயின்னம்வெருகருவைக்கேளே. (௭௱௰)

காரசாரம்இருபத்தஞ்சு.

கருவானகருவதுதானென்னவென்றால்காரசாரங்களிதுயிருபத்தஞ்சு, உருவானபாஷாணம்அறுபத்துநாலும்உத்தமனேஉபரசம்நாத்திருபத்தெட்டு, பருவமுடன்யினவகையைநன்றாய்ச்சொல்வேன்பக்குவமாய்த்தானறிந்துபதியில்நின்று, திருவானபதியறிந்துகுருவைக்கார்க்கதிற்கமுடன்யினவகையைசெப்பக்காணே. (௭௱௰௧)

காணவேசொல்லுகிறேன்காரசாரங்கருணையுள்ளபேர்வகையைசொல்லக்கேளு, பூணவேவழலைபூநீறுசாரம்பொங்காதயெவாச்சாரம்சத்திச்சாரம், பேணவேசிவகாசிச்சாரஞ்சீனம் பெருகின்றயேகம்பச்சாரஞ்சூடன், தோணவேவெங்காரம்அமுரியுப்பு சுத்தமுள்ளகற்பூரங்கல்லுப்பாமே. (௭௱௰௨)

உப்பானயினங்களிந்து வளையலுப்பு உருகின்ற சவுட்டுப்புதிலாலவணமாகும, அப்பானலவணமடாகெந்தியுடலவணம் அரிதானபொன்னம்பர் சிந்துலவணமுமாம், மெய்பபானகடல் நுரைமீனம்பரோடுமேலாகதான்காச்சுலவணமதுவாகும், தப்பாமல்சொல்லி விட்டேன்காரசாரம்தானறிவாய்சாரவகையிருபத்தஞ்சே. (௭௱௰௩)

பாஷாணம்வகைஅறுபத்துநாலு.

அஞ்சானபாஷாணமறுபத்துநாலில் அப்பனேசுயம்புவகைமுப்பத்திரெண்டு, நெஞ்சாரச்சொல்லுகிறேன்நன்றாய்க்கேளு நிசமானகற்கடகபாஷாணந்தான், பஞ்சானகோளகபாஷாணஞ்சூதம் பத்தியுள்ளஅரிதாரம்கெந்தபாஷாணம், நஞ்சானவீரமொடுவெயக்கிரூந்தம் நாலானதாலபாஷாணந்தானே. (௭௱௰௪)

தானானஅமுர்தபாஷாணந்தொட்டி தண்மையுள்ளசிர்பந்தங்குதிரைப்பல்லு, ஊனானசங்கமாங்கெவுரிதுத்தம்உத்தமனே பலண்டுவபாஷாணங்சாந்தம், தேனானலிங்கமொடுமனோசிலைதாளகமுஞ் சிலசிவாசரக்காண்டம்ஆவின்பல்பாஷாணம், பூனனகாலாங்ககற்பரி பாஷாணம்புகலுகின்றஅஞ்சனபாஷாணங்காணே. (௭௱௰௫)

காணவேகச்சலாங்கார்முகில்சிதாங்கங்கருணையுள்ளசிலாமதமப்பிரகம்வெள்ளை, பூணவேசுயம்பானபாஷாணந்தான்புத்தியுடன்முப்பத்திரெண்டும்பார்த்து, தோணவேபூதவகைஅறிந்துசேர்க்கசுத்தமுடன்கட்டுவதுசித்தமாகும், பேணவேஅறிவதனால்தன்னைப்பார்த்துபெருகின்றவைப்புமுறைதன்னைக்கேளே. (௭௱௰௬)

பறங்கிவைப்புபாஷாணம்.

கேளப்பாவைப்பானபாஷாணந்தான் கெணிதமுடன்முப்பத்தி ரெண்டுஞ்சொல்வேன், சூளப்பாதொட்டிசெம்புதொட்டி அயத்தொட்டிசுகமானபுத்தொட்டின் தொட்டிபாஷாணம், நீளப்பாரத்தசிங்கியேமசிக்கிசமானரத்தினசிங்கிதீமுருகல், வாளப்பாகார்முகியும்லிங்கபாஷாணம் வண்மையுள்ளவெள்ளையுடன்கெவுரிதானே. (எ௱௰எ)

தானனவீரமொடுகோழிதலைகெந்தி தன்மையுள்ளபவழபுத்து சுரக்காய்கெந்தி, தேனனஅரிதாரங்கோடாசூரிதெளிவானபஞ்சபட்சிகுங்குமபாஷாணம், ஊனனொத்தவர்னங்கோமுகபாஷாணம் உருதியுள்ளதுருசுதுத்தம்ரசிதபாஷாணங், கோனனசூதபாஷாணங்கெந்தங்கொள்கின்றநீலவர்னபாஷாணங்கானே. (எ௱௰அ)

கானவேகாரமுகில்சோரபாஷாணங் கருவானநாகமுகில்பாஷாணந்தான், பூணவேபரங்கிவைப்புமுப்பத்திரண்டும் போக்குடனே சொன்னதைநீபுத்தியாக, பேணவேஅறிந்துக்கொண்டுவேதைபாரு பிலமானவாசியிலேநின்றுதேறு, தோணவேநின்றுமனந் தேர்ந்துக்கொண்டுசுத்தமுடன்சிவயோகத்துறையைக்காரே. (எ௱௰௯)

துறையானபாஷாணமெட்டெட்டுந்தான் துலக்கமுடன்சொல்லிவிட்டேன்சூழ்ந்துபாரு, நிறையானநிறையறிந்துசூழ்ந்துப்பார்த்தால் நெத்தியென்றகண்ணதுதான்சுத்தமாகும், வறையானகண்ணதுதான் சுத்தமானல்வாசியது பூரணமாய் வளையில்தங்கும், திரையானமாய் கைதனையகலத்தள்ளிசிவசிவாபூரணத்தில்திறமாய்நில்லே. (எ௨௰)

உ ப ர ச ம்.

திறமானஉபரசத்தைச்சொல்லக்கேளு திறகமுடன்நூத்திரெண்டுபத்துமைந்தா, உறமானதுருசுடனேபொன்னிமிளையோடு உத்தமனேரசிதமென்றநிமிளையோடு, நிறமானகஞ்சமொடுலோகங்காந்தம்நிறைந்தபொன்னப்பிரகம்சிகப்புத்தாலுங், கறமானகிஷ்ண அப்பிரகமோடுகெருவானசுவேதஅப்பிரகந்தானே. (எ௨௰க)

தானனகாந்தமொடுஊசிக்காந்தந்தறமானவயக்காந்தம்உருளைக்காந்தம், ஊனவகல்க்காந்தக்கல்நாருந்தான் உத்தமனேசலாசத்துசாஸ்திரவேதி, கானனகல்மதம்அஞ்சனக்கல்லோடு கருங்கல்லும்படிகமுடன்சுக்கான்கல்லும், தேனனவீரக்கல்ராசவற்கங் திறமானகெருடபட்சியோடுசெங்கலே. (எ௨௰௨)

செங்கலொடுயெலும்புமயிர்நாகவண்டு திறமானநண்டுநத்தைகி ளிஞ்சியாமை, அங்கமுள்ளமுட்டையுடன்ஆனைக்கொம்பு அப்பனே பண்ணியுடன்மாட்டுக்கொம்பு,பங்கமில்லாகலைக்கொம்பு யிந்திரகோ பம் பல்லுடனேபூனைகஞ் சிவந்தஅட்டை, சங்கையுள்ளதவளையுட ன்கரடிகோழிசங்குசிப்பிமுத்துடனேபவழந்தானே. (எஉ௩)

தானனபவழமொடுவயிரம்பச்சை சங்கையுள்ளகோமேதகம்பு ஷ்பருகம், ஊனனவயிடூரியம்சிகப்புநீலம்உத்தமனேகெண்டகச்சிலை சூடாலைக்கல், மானனமஞ்சள்கல்மரக்கல்லோடு மைந்தனேதேக்கல் லுதவளைக்கல்லு, கோனனசிலாவங்கம்சிலாநாகந்தான் கொடியஅன் னபேதியொடுஅஸ்திகாணே. (எஉ௪)

காணவேஅஸ்தியொடுசொர்னபேதி கருவானவுவர்மண்மாங்கி ஷமாம்பேதி,பேணவேகருமணல்கருங்கிட்டந்தான்பெரிதானசெம்ம ண்ணும்சுத்தமண்ணும்,தோணவேகருவண்டுமுடவாட்டுக்கால்சுத்த முள்ளபண்ணிமுள்ளுயெலியின்முள்ளு, பூணவேகடல்துறையுமீனெ லும்புபுத்தியுள்ளமுள்சங்குயின்னங்கேளே. (எஉ௫)

கேளடாநாகபச்சைபேரோசனையுங் கெணிதமுள்ளமரகதமாம் பச்சைதானுங், காலடாகாகதண்டுவெள்ளைச்சுக்கான் காகசிலைபுத்தா னபவழங்கஸ்தூரி, மாளடாமந்தாரசிலைகல்பாசி மகத்தானவேகமடா காண்டாமிருகம், சாளடாமாங்கிஷசிலைசாலக்கிருமம்சங்கையுள்ளது ளிர்க்கல்லுபடிகக்கல்லே. (எஉ௬)

கல்லானகாவில்கல்செம்புமண்ணு கருணையுள்ளநாகமண்ணு வ ங்கமண்ணு, நல்லானவெள்ளிமண்ணுவெள்ளீயமண்நலமானலோகம ண்ணுயேமமண்ணு, வல்லானமயிலிரகு கருஞ்சுக்கான்தான்மகத்தா னகானக்கல்குருந்தக்கல்லு, சொல்லானரசிதசிலையேமசிலைமைந்தாசு த்தமுள்ளநாகசிலைவங்கசிலைகாணே. (எஉ௭)

காணப்பாவெள்ளீயசிலைதான்பாரு கருவான அயச்சிலைதிருச்சி லைதானகும், பேணப்பாவெங்கலமாமலைதானையா பெரிதானசெம்பு மலைபித்தளையின்மலைதான், தோணப்பாவெள்ளிமலை தங்கமலைமைந் தாசுகமானயின்னமுபாசங்களுண்டு, தேனப்பாருசிபோலே தேடிப் பார்த்துசிவாயகுருகற்பமதைதினமுங்கொள்ளே. (எஉ௮)

கொள்ளாதமனத்தோர்க்கு ஞானமேது குவிந்தயிட மறியார்க்கு
யோகமேது, பொல்லாதபாவியற்குகற்பமேதுபூரணத்தையறியார்க்கு
தீட்சையேது, கல்லாதமாந்தருக்குநூலங்கேதுகருத்துரைத்துநில்லா
ர்க்குகாலங்கேது, உள்ளானஉள்ளமதைகனலாய்தூண்டி உத்தசிவசத்
தியைநீபூசைபண்ணே. (௭௨௯)

சிவசத்திப்பூசை.

பூசையென்னவாசிமலர்தனையெடுத்து பூரணமாய்ப்புருவனடுசு
ழினைக்கேத்தி,நேசமுடன்கற்பூரதீபந்தன்னில்நினைவாகஅம்மலரைசா
த்தினுக்கால், வாசமுள்ளவாசிமலர்தன்னோடொக்க மகத்தானதீபம
டாமூலத்தேகு, ஆசையுடனத்தீபமூலத்தேகிலருள்ஞானசிவகலைஅ
திசயங்காணே. (௭௩௰)

காணுதற்குமூலமடாஆதாரந்தான் கருத்துறவேஆதாரந்தன்னி
ல்நின்று, தோணுதற்குவாசியென்றதிறவுகோலால்சுழினைதனைநின்று
திறைசுழத்தித்தள்ளி, ஊணுதற்குஓங்காரக்கம்பமேறஉத்தகலைரவிம
தியுமொன்ருய்க்கூட்டி, பேணுதற்குஉச்சியென்றதுவாதசாந்தப்பெ
ருவெளியைப்பார்த்தாக்கால்சோதியாச்சே. (௭௩௧)

சோதியென்றசிவஞானசிவயோகத்தில் சுத்தமுடன்தானிருந்து
குருவைக்காண, சாதியென்றபாஷாணகாரசாரம்சதாகோடிஉபரசங்
கள்லோகமெல்லாம், நீதியுடன்பேர்வகையும்பூதசேற்கைநிச்செயமா
ய்சொன்னதைநீஅறிந்துக்கொண்டு, ஆதியுடன்அனுதிதனை சேர்ப்ப
தற்குஅப்பனேசத்துருமித்துருவைக்கேளே. (௭௩௨)

துருசுக்குசத்துரு.

கேளப்பாதுருசுசத்துருவைக்கேளு கிருபையுள்ளசவுக்காரம்வ
ங்கம்நாகம், சூளப்பாயிந்துப்புகாந்தஞ்சிங்கிசுடுகின்றகற்சுவடுகல்லு
புந்தான், நாளப்பாவெள்ளைபாஷாணஞ்சூடன்நலமானஅப்பிறகம்யி
ணங்கனோடு, மேலப்பாதொட்டியுடஅஞ்சனபாஷாணம்வெகுசுருக்
குதுருசுக்குசத்துருவென்றெண்ணே. (௭௩௩)

துருசுக்குமித்து.

எண்ணவேமித்துருவின்விபரங்கேளு யேகாந்தலிங்கமொடுகெ
வுரிபண்ணை, நண்ணவேநிமிளையொடுபரிமனோசிலையும் நாதமென்ற
பூரமொடுசூதங்கெந்தி, உண்ணவேவெங்காரம்வீரம்சாரம் உத்தம
னேஅரிதாரமித்துருவுமாகும், பண்ணவேசத்துருமித்துருவுங்கண்
டுபார்மகனேயிதிலனந்தம்வேதையாச்சே. (௭௩௪)

ஆச்சப்பாசத்துருவால்துருசைக்கட்டி அப்பனேமித்துருவால் குருவைச்செய்து, நீச்சப்பாநிலையாதவேதைபார்க்க நிகருணக்குயில் லேபடாநினவாய்ப்பார்த்தால், மூச்சப்பா அறிவுபூரணமாய்நின்றுமுத் தியுள்ளசிவயோகஞ்சுத்தமாகும்,காச்சப்பாகசடானபுத்திதன்னைக்கா ச்சியந்தக்கசடகத்தித்தன்னைப்பாரே. (எ௩௫)

சாரசத்துரு.

பாரப்பாசாரத்தின்சத்துருவைக்கேளு பதிவானகடல்நுரையும் அப்பிறகஞ்சவுடு, நேரப்பாகாரீயங்கல்சுன்னந்தான் நிசமாகமடிந்தசு க்கான்யேரண்டத்தோல், காரப்பாவளையலுப்புகார்தம்வங்கங்கருவா னயிந்துப்புபடிகக்கல்லு, சேரப்பாயிவ்வளவுஞ்சாரச்சத்துருவாம் தி றமானமித்துருவைசெப்பக்காணே. (எ௩௬)

சாரமித்துரு.

காணப்பாசாரமித்துருவைக்கேளு களிம்பானசெம்புடனேரு சவற்கம், பூணவேகிமிளையொடுகெவுரிநாகம் பொருந்திநின்றலிங்க மொடுகாரீயங்கல்நார், பேணவேவிரம்வெடியுப்புக்காரம் பிலமான கெந்திசிலைதாளகமித்துருவாம், தோணவேசத்துருவால் சாரங்கட்டி சுகமானமித்துருவால்குருவைப்பாரே. (எ௩௭)

குருவரியாமாந்தருக்குகருவங்கேது கூர்ந்துமனம்நிலையாற்குவா சியேது, திருவறியாமூடருக்குதெய்வமேதுசித்தம்நிலையரியாற்குயோ கமேது, உருவரியாகுருடருக்குஞானமேதுஒன்றும்யிடமறியாற்குதீ பமேது, பருதிமதியரியாற்குகற்பமேது பாலகனேசத்திசிவம்பணிந் துபோத்தே. (எ௩௮)

வெடியுப்புசத்துரு.

போத்திமனக்கனிவாலேபுலத்தியாகேள்புத்தியுடன்வெடியுப்பு சத்துருவைக்கேளு, தேத்தியதோரண்டோடுதீமுருகல்சிங்கி திரமா னகெந்திதொட்டிசிலைகாந்தம்வற்கம், பார்த்திபனேவெள்ளிசெம்புயி ரும்போடுதுருசுபதிவானவெள்ளீயங்காரீயஞ்சவுடு, தோத்தியதோர் சூடனொடு சுரக்காய்கெந்தி சுகமானவெடியுப்பு சத்துருவென் றெ ண்ணே. (எ௩௯)

வெடியுப்புமித்துரு.

எண்ணவேமித்துருவின்வகையைக்கேளு யின்பமுள்ளப் பழம் புளியும்சிலையுஞ்சிங்கி, உண்ணவேரோமமொடுநைகந்தகம் உத்தம னேதாளகமும்துத்தம்விரம், திண்ணவேலிங்கமொடுகாரங்கல்லுசிவ சிவாயித்துடமீனமித்துருவாம்பாரு, நண்ணவேசத்துருவைமித்துரு வைப்பார்த்துநாட்டமுடன்நீயிருந்துநயனம்பாரே. (எ௪௰)

கல்லுப்புசத்துரு.

பாரப்பாகல்லுப்புசத்துருவைக்கேளு பதிவானவீரமொடு சவுட்டுவில்லை, நேரப்பாபழம்புளியும் சிங்கிசிலையோடு நின்பவழப்புத்ததுவுஞ்சத்துருவேயாகும், ஆரப்பாஅறிவார்கள்சத்துருமித்துருவை அறிந்துகருவெடுத்துநீயாடவேணும், காரப்பாகல்லுப்புசத்துருவைச்சொன்னேன்கருணையுள்ளமித்துருவைகலந்துகேளே. (௭௪௧)

கல்லுப்புமித்துரு.

கேளப்பாமித்துருதானென்னவென்றால் கெவுரியுடன்செம்பிரும்புபூரங்காரம், நாளப்பாதாளகமும்கிமிளைநாகம் நன்றானஅப்பிரகம் லிங்கம்வங்கம், சூளப்பாயிவ்வளவு மித்துருவேயாகும் சூட்சமுடன் கைமுறையாய்தொடுத்துப்பாரு, கோளப்பாயில்லாமல் சரக்கெல்லாந்தான்கூர்மையுடனின்றிலங்குங்கூர்ந்துபாரே. (௭௪௨)

காந்தசத்துரு.

பாரடாகாந்தத்தின்சத்துருவைக்கேளுபதிவானபுளியுடனேஅண்டஞ்சூடன், நேரடாசலாசத்துபூரணமந்தாகினவானகாரமதின்சத்துருவேயாகும், காரடாசத்துருவைஅகலத்தள்ளி கருணையுடன்மித்துருவைகருவாய்ப்பார்த்து, சேரடாசேர்ந்துநிலைஅறிந்துக்கொண்டு சிவசிவாகாந்தமித்துருவைக்கேளே. (௭௪௩)

காந்தமித்துரு.

கேளடாஉபரசங்கள்பாஷாணங்கள் கெணிதமுள்ளமித்துருவென்றறிந்துக்கொள்ளு, நாளடாசினமதுக்கிதுவேசூட்சம்நன்மையுடன் தானறிந்துநாட்டம்பாரு, வாளடாவாசியிலேமகிழ்ந்துக்கொண்டுமகத்தானபூரணத்தில்மனதைநாட்டி, தாளடாபெரியோர்கள்தனக்குமைந்தாசச்சுதானந்தமென்றஅறிவைப்பாரெ. (௭௪௪)

தங்கசத்துரு.

அரியானதங்கமதின்சத்துருவைக்கேளு அப்பனேசவ்வீரங்காந்தஞ்சூதம், நெறியானகெந்தியொடுஅண்டத்தோடு நேரானதாளகமுமனோசிலைஅப்பிரகம், குறியானகெவுரிவெள்ளையிணங்கன்கண்டாய்குணமானலிங்கமொடுகிமிளைநாகம், பரியானதங்கமதுக்கிதுவெல்லாந்தான் பாலகனேசத்துருவென்றறிந்துக்கொள்ளே. (௭௪௫)

தங்கமித்துரு.

கொள்ளடாதங்கமதின்சத்துருவைத்தள்ளி கூர்மையுடன்மைத்தகெல்லாமித்துருவேயாகும், நில்லடாசத்துருமித்துருவைப் பார்க்

துகினவாலேகினவறிந்துதன்னைப்பார்த்து, உள்ளடா உள்ளுரைந்து உள்ளங்கொண்டுஉத்தகலைக்கியானகேசரியைப்பார்த்து,செல்லடா அவள்பதமேகெதியென்றெண்ணிதிறமானசூதசத்துருவைக்கேளே. ()

சூதசத்துரு.

கேளப்பாபூநீறுகற்பூரம்கிமிளைகெடியானவெடியுப்புமிரும்புகாந்தம், வாளப்பாகுதிரைப்பல்சத்திசார மகத்தானகெவுரியொடுவெள்ளைசிங்கி, சூளப்பாயிவ்வளவுஞ்சூதச்சத்துருவாம் சுருக்கானசத்துருவால்துஞ்சப்பண்ணி, மேலப்பாமித்துருவால் செயமேசெய்ய விபரமுடன்சொல்லுகிறேன்னன்றாய்ப்பாரே. (எ௪எ)

சூதமித்துரு.

பாரப்பாசூதமித்துருவைக்கேளுபதிவானதிமுருகல்பவழப்புத்து, நேரப்பாசாரமுடன்வெங்காரந்துத்தம் நிலையானவெள்ளிசெய்புதுருசுதொட்டி, சாரப்பாதாளகமுஞ்சிலைவீரங்கெந்தி தனிவங்கங்காரீயம்நாகமப்பிரகம், காரப்பாயிவ்வளவுமித்துருவேயாகுங்கருவாலே அறிந்துசெய்யக்கருதிக்காணே. (எ௪அ)

இரும்புக்குசத்துரு.

காணவேயிரும்புக்குசத்துருவைக்கேளு கருவானகெவுரிவெள்ளைபூநீறுசத்து, பூணவேசவ்வீரம்சிங்கிசிலைசாரம் பொருந்திநின்றவங்கமொடுகிளிஞ்சிகெந்தி, தோணவேஅண்டமொடுஅப்பிரகங்காரம் சுத்தமுள்ளயிரும்புக்குசத்துருவேயாகும், பேணவேசத்துருவால்அயத்தைக்கொன்றுபிலமானமித்துருவாலுருக்கிக்காணே. (எ௪௯)

இரும்புக்குமித்துரு.

உருக்கவேமித்துருதான்மயூரஞ்செம்புஉண்மையென்றகுருடனுடன்கெந்திதங்கம், தருக்கவேபூனைகஞ்செம்புகாந்தம் தயவானனுகமுடன்வெள்ளிபூரம், பருக்கவேமித்துருவை யறிந்துக்கொண்டு பாலகனேசகலகருமானம்பாரு, பெருக்கவேகருமானசூட்சங்கண்டு பெருமையுள்ளரசவாதம்பேணிப்பாரே. (எ௫ய)

நாகசத்துரு.

பாரடாநாகத்தின்சத்துருவைக்கேளு பதிவானவளையலுப்பு அன்னபேதி, நேரடாஅபின்மிளகுவெள்ளைவீரம்கினவானசிங்கியொடுநண்டோடுவெள்ளி, சேரடாபடிகமொடுரங்கம்வங்கம் செம்மைவெடியுப்புடனேகிளிஞ்சிஅண்டம்,காரடாநாகமுடன்சத்துருவேயாகுங் கருணையுடன்மித்துருவைக்கண்டுகேளே. (எ௫க)

நாகமித்துரு.

கேளப்பாகருநாகஞ்சாரங்கெந்திகிருபையுள்ள பூனைகமயூரச்செம்பு, வேளப்பாசூதமுடன்கெவுரிசெம்பு விதமானசலாசத்துயிரும்பு காந்தம், சூளப்பாஅப்பிரகம்கிமிளேதாளுஞ்சுகமானநாகமித்துருவேயாகும், ஆளப்பாசத்துருமித்துருவைக்கண்டு ஆதியந்தபூரணத்தில் அறிவாய்க்காணே. (எருஉ)

காரீயசத்துருமித்துரு.

காணவேகாரீயசத்துருவைக்கேளு கருவான்கெவுரிகெந்திரண்டுகத்தை, பேணவேஅயக்காந்தம் கிமிளேஅண்டம் பிலமானசுன்னமொடுருசவற்கம், தோணவேயிவ்வளவுங்காரீயச்சத்துருவாம் துரியமுடன்மித்துருவைசொல்லக்கேளு, பூணவேனகமுடநாகச்செம்புபுதுமையுடன்வெள்ளிவங்கஞ்சூதந்தானே. (எருந)

தானைசரக்குகளேஅறிந்துக்கொண்டு தண்மையுடன் சத்துருவால்சங்காரம்பண்ணி, கோனைமித்துருவால்செயமேசெய்து குருவானபதிதனிலேவாசிபூட்டி, வானைஅண்டபதங் கெதியென்றெண்ணிமகத்தானகேசரியைவணங்கிக்கொண்டு, தேனைன அமுர்தரசபானத்தாலேதிருவானகர்வியத்தைசெப்பினேமே. (எருச)

நூல்தொகை.

செப்பினேன்வயித்தியகாவியத்தில்மைந்தா சிவசிவாஅன்னாத்தில்திறமாய்ச்சொன்னேந், துப்பரவாய்ஆயிரத்தியிறுனூறுக்குள்சுத்தமுடன்சகலகலேக்கியானஞ்சொன்னேம், மெய்ப்பாகசவுமியசாகரமுஞ்சொன்னேம்வேதமயமானபூரணமுஞ்சொன்னேந், தப்பில்லாமாந்திரிகமனுவிக்கியானங் தத்துவமாயிம்மூன்று ஆயிரமுஞ்சொன்னேன். (எருரு)

சொன்னேனுன்வெகுகோடிசாஸ்திரங்கள்தொகையெடுத்துபார்க்கவென்றுலக்கோயில்லே, முன்னேதான்அண்ணவி அருளேப்பெத்துமுடிவில்லாக்கிரந்த மெல்லாங் தமிழாய்ச்செய்தேன், யென்னேரம்போதைபூரணத்தில்கின்று யெடுத்துறைத்தசாஸ்திரங்கள் கோடாகோடி, விண்ணோர்கள்தான்மகிழபூசைவிதிதீட்சை மேன்மைபெறச்சொன்னதைநீயறிந்துபாரே. (எருசு)

பாரப்பாபூரணமாய்தன்னேப்பாரு பாடினதோர்சாஸ்திரங்கள்பயனேப்பார்த்து, காரப்பாசுழிமுனையாம்புருவமேவிகதித்தெழுந்தவாசியினுல்கனலேத்தூண்டி, மேரப்பாஅண்டபதமுடிவில்கின்று மெய்ஞ்ஞானபூரணமாய்த்தீபம்பாரு, காரப்பாதீபமதைதினமும்பார்த்தால்கயிலாசபதவிதனேக்காணலாமே. (எருஎ)

காணவேஅக்கினியாம்லலாடபீடம் கயிலாசபதவியடா புருவமையம், பூணவேமையமென்றஅந்தத்தேகிபுத்தியுள்ளதேசியடாவாசிகொண்டு, தோணவேகண்டமதில்அங்கென்றாணிசுத்தமுடன்முக்கோண துரியங்கண்டு,பேணவேஅத்துரியாதீதங்கண்டால்பின்னேது முன்னேதுரெண்டுமொன்றே. (எ௫௮)

ஒன்றானபூரணமேசதாநந்தியாகும் உத்தகலைவாசியடாபிராணனுச்சு, ஒன்றானபிராணனல்லோசோதிதீபம்உருமையுடன்தீபமதை நன்றாய்ப்பார்த்து, ஒன்றானபூரணியைதியானம்பண்ண உருதியுனக்கில்லையடா உருவமவைத்து, ஒன்றாகஒருமனதாய்ப்பூசைபண்ணி உண்மையுடன்வாசிமலருகந்துநாட்டே. (எ௫௯)

நாட்டமுடன்விண்ணொளியாய்க்கனலேனுக்கு நந்தியென்றஅக்கினிதான்பிரகாசிக்குந், தேட்டமுடன்தன்னொளிவே பிரம்மமாகுந் தேகமென்றதத்துவந்தான்மாயாரூபம், ஆட்டமென்றவாசியினால்தன்னைப்பாருஆனந்தமதியமுர்தமுண்டுதேறு, ஒட்டமென்ற காலறிந்து அடங்கிநின்றால்உனதுடம்புநாதமடா உருதிகாணே. (எ௬௰)

உருதியுடநவக்கிரகபூசைபண்ணி உத்தமனேஅனுக்கிரகந்தன்னில்நின்று, பருதிமதிசுடரதனைப் பணிந்துக்கொண்டுபாலகனேரேசகபூரகமுஞ்செய்து, சுருதியுடன்கும்பகமாய்அந்தத்தேகிசுடர்ஞானதீபமதில்சொக்கிநின்று, திரிகரணசுத்தியதாய்தன்னைப்பார்த்தால்சிவசிவாயெங்குஞ்சிவமயமதாமே. (எ௬௧)

மயமானசிவமயமேஉலகமாய்கை மாயமென்றமாயமடாமனிதர்வாழ்வு, நயமானநயமில்லாவாழ்வுதன்னை நத்திமனமகிழ்ந்து செயல்கெட்டார்பாரு, சுயமானபூரணமேவாழ்வென்றெண்ணி சுத்தமுடன் சத்திசிவபூசைபண்ணி, செயமானசெகச்சோதிதன்னைமைந்தா தீர்கமுடனடுவிருந்துஉச்சம்பாரே. (எ௬௨)

ரசமணி.

உச்சமதைதானேக்கிதவமேசெய்ய உருதியுள்ளகெவுனமணிஒன்றுகேளு, உச்சமென்றநாதவிந்துசத்திசிவமாச்சு உருமையுடன்நாதவிந்துஒன்றாய்க்கூட்டி, உச்சமென்றபருதியனலதிலேதாக்கிஉறுதியுள்ளசூதமதுஉடனேசேர்த்து, உச்சமென்றபுருவமதைத்தியானம்பண்ணிஉண்மையுடன்கடமதனில்சமாதுவையே. (எ௬௩)

வையப்பாசமாதுதனில்திரணைபோட்டு மாற்கமுடன்தானிருந்துமனதொன்றாகி, மெய்ப்பாருத்திரனைத்தியானம்பண்ணிமேன்மை

யுடன்மண்டலஞ்சென்றெடுத்துப்பாரு, செய்யப்பாசெய்ததொருதவ த்தினலேசிவசிவாசூதமதுதிரண்டுபோகும், பையப்பாதிரண்டதுவு ம்வெண்ணைபோலாம்பத்தியுடன்தானெடுத்துபதனம்பண்ணே. ()

பண்ணப்பாவெண்ணைதனையெடுத்துக்கொண்டுபத்தியுடனதுக் குளிகைதங்களுக்கு, நண்ணப்பாரெண்டுமொன்றாய்க்கல்வத்திட்டுநை யவேஅறுசாமமத்தித்தாக்கால், கண்ணப்பாகருணைவளர்சோதிபோ லேகருவானசூதமதுசெயமாய்நிற்கும், விண்ணப்பாதானேக்கி செய சூதந்தன்னைவேணபடிமணியதுபோல்செய்துக்காணே. (எசுரு)

காணவேசெய்தமணிதன்னைமைந்தா கமலரசஅமுர்தமதில்கனி வாய்ப்போட்டு, பூணவேமூன்றுனுளெடுத்துப்பாருபுண்ணியனேரச மணிதானிறுகிநிற்கும், பேணவேஅந்தமணிதனையெடுத்துபேசாதம வுனரசநாதந்தன்னில், தோணவேஅதிலமர்த்திஅஞ்சாறுள்தான்சுத் தமுடன்தானெடுக்கவெத்தியாமே. (எசுசு)

வெத்தியுள்ளரசமணியையெடுத்துமைந்தா வேதாந்தலகிரிசார ணையேசெய்து, முத்தியுடன்சற்குருவைத்தியானம்பண்ணி முனையா னசுழினையிலேவாசிபூட்டி, சித்தமெந்தன்பாக்கியமென்றெண்ணிமை ந்தாசிவசிவாரேசகபூரகமும்பண்ணி, பத்தியுடன்கும்பகத்தில்நின்று அந்தபதிவானரசமணியைஅடக்கஞ்செய்யே. (எசுஎ)

செய்வதுதானுவுதனிலடஞ்செய்து செகச்சோதியானபூரணத் தைப்பத்தி, மெய்தவரூபூரணமாய்நின்றுயானல் வேகமுள்ளவாசிய துஅடங்கும்வீட்டில், தொய்தமுடன்நினைத்தபடிகெவுனந்தங்குஞ்சு ழினையிலேகற்பூரதீபந்தோனுஞ், சைதன்னியமானதொருதீபங்கண் டால்தானவனுயென்றுநித்தம்வாழலாமே. (எசுஅ)

வசியமை.

ஆமப்பாயின்னமொருசூட்சங்கேளு அடங்காதரூபியடாகாமரூ பி, தாமப்பாகண்டவுடன்கொண்டுவந்துதயவான தேவாங்குமதனப் பூடு, தாமப்பாரெண்டையுமேகரிக்கிகீத்தி சந்தணமுங்கற்பூரசவ்வா துங்கூட்டி, தாமப்பாபன்னீரால்அரைத்துருட்டிசங்கையுடன்திலர்தமி ட்டுதன்னைப்பாரே. (எசுசு)

பாரடாபார்த்திக்குவிசையஞ்செய்ய பரிவானரசக்குளிகையட க்கம்பண்ணி, நேரடாநீறணிந்துநிலையில்நின்று நீதியுடன்சின்மயமா யிருந்தாயாகில், வீரடாகொண்டபிணியாளரோடு வேதாந்தங்கத்த தொருபெரியோரெல்லாம், மூரடாகூடியல்லோ உனதுபாதம் உண் மையுடன்கண்டுபதம்பெருவார்பாரே. (எஎ0)

சிஷருக்குச்சொல்ல.

பாரப்பாஉனதுதிருக்கையால்நீரு பத்தியுடன்பெத்தவற்குபல னைக்கேளு, காரப்பாகண்ணேறுநாவேறுந்தான் கடிதானபில்லிசூனி யங்கள்தோஷம், விரப்பாகொண்டதொருகுன்மரோகம் வெந்துநின் றகுட்டமொழுமூற்சைவாய்வு, நேரப்பாஉனதுபதங்கண்டபோதேநி ன்றவிடந்தெரியாமல்நீங்கிப்போமே. (எஎக)

நீங்கிப்போம்சகலவிஷரோகமெல்லாம் நிசமான சற்குருவின்கி டாட்சத்தாலே, பாங்குபெறத்தேவாதிதெரிசினங்கள் பத்தியுடன்கா ணுமடாநிஷ்டையோகம், பூங்கமலஅமுர்தரசகெவுனத்தாலேபூலோ காரசமெல்லாம்புத்திகேழ்ப்பார், சாங்கமாயுனதுபதங்கெதியென்றெ ண்ணுந்தண்மையுள்ளபிள்ளைகட்குத்தானேசொல்லே. (எஎஉ)

தானென்றதிசைதிட்சைதன்னைக்காட்டிதண்மையுடன் ஆதார திட்சைசொல்லி, ஞானமென்றபுருவநிலைதன்னிலேதான்நந்தியொளி தனையறியநயனங்காட்டி, மோனமென்றநாதவிந்துநின்றகுட்சம் முத் தியுடன்அகாரமுடன்உகாரஞ்சொல்லி, வானமென்ற அண்டசேசரி யைக்காட்டிமகத்தானபூரணத்தின்வகைசொல்வாயே. (எஎங)

வகையானஆதாரவழியுஞ்சொல்லி வழியறிந்துயேருதற்குவாசி சொல்லி, சிகையானதீபமதைதினமும்நோக்கிசிவபோதநிஷ்டையுட ன்றிறமுஞ்சொல்லி, பகையானதீவினைகள் அகல்வதற்குபத்தியுடன் காயாதிகற்பஞ்சொல்லி, தகையாமல்தானிருக்குமமுர்தங்காட்டிசதா காலசின்மயமாய்தானேநில்லே. (எஎச)

தானாகநின்றநிலைபெறுவதற்குத்தண்மையுள்ள சடாட்சரத்தை செபிக்கச்சொல்லி, வானாகநின்றுசிவம்செபிப்பதற்கு வணக்கமுடன் தவத்திலுடவரிசைசொல்லி, கோனாகநின்றுதவஞ்செய்வதற்குகுண மாகநிஷ்டையுடன்குறியைச்சொல்லி, ஊனனநிஷ்டைதனக் குருதி யானஉண்மையென்றகற்பமதையுகந்துசொல்லே. (எஎரு)

உகந்துநின்றகற்பமதுக்குறுதியாகஉத்தமனேநிறுவிகற்பச்சமா துசொல்லி, அகந்தெளிந்துபூமிவலம்வாவென்றேதான் ஆதரவாயுரு திசொல்லிஅனுப்புமைந்தா, முகந்தெளிந்த முத்திரையாங் கமலக்க ண்ணுமுனையானசுழிமுனையாய்நின்றகண்ணால், செகந்தெளியநன்ம னதாய்ப்பார்த்துமைந்தா, சின்மயத்தினருளாலேதெளிந்துநில்லே.()

தெளிந்துகம்பமுண்ணயிலேலமைந்தாமைந்தா செடமிருகச்சாத
னையைசெப்பக்கேளு, வழிந்தரசந்தனேயறிந்துகொண்டுநின்றுமாற்க
முடன்கணபதியைவணங்கிமைந்தா, நெளிந்துமனமலேயாமல்யிருகா
ல்கூட்டிநேமமுடன்பதினாறுஉக்குபோட்டால், சொரிந்துநின்றநரம்
பிருகிமூலகுட்சஞ்சுத்தமுடன்துலங்குமடாயின்னங்கேளே. (௭௭௭)

கேளப்பாநின்றநிலேதன்னிலேதான்கிறுபையுடன்யிருகையும்நி
லத்திலூணி, வேளப்பாவில்லதுபோல்நிதானங்கொண்டு மேன்மை
பெறபுருவமதில்மனதைவைத்து, மேலப்பாகுருபாதந் தன்னேனக்
கிவிபாமுடன்னூறு தெண்டஞ்செய்தாயாகில், காலப்பாகொண்டுநி
ன்றவிஷநீரெல்லாங்கக்குமடாரோமமென்றகண்ணூல்தானே.(௭௭௮)

தானேதான்யிந்தவிதஞ்செய்துக்கொண்டு தண்மையில்லாவிஷ
நீரைப்போக்காவிட்டால், ஊனேதானுடம்பேரி மயிர்க்கண்சென்று
ஊத்திருந்துமயிர்வெளுத்துயுமன்றுதேகம், வீணேதா னெழுந்திரு
க்கவலுவுங்கெட்டு விரசுகொண்டு நடப்பதற்குமேவொட்டாது, வா
னேதான்கெதியெனவே உயிர்தானிற்கு மகத்தானசிலம்படிக்கவகை
தான்பாரே. (௭௭௯)

சிலம்பம்.

பாரப்பாசிலம்படிக்கஉக்கிதெண்டம் பதிவான ஆதியந்தமார்
தான்காண்பார், நேரப்பாதினந்தோரும்பழக்கமானல்நின்புசமும்கா
ல்பிலமுநிலேக்குமப்பா, ஆரப்பாஉனக்குநிகர்ஒருத்தரில்லே ஆகாதசத்
துருதான்வந்தெதிர்த்தானாகில், காரப்பாகைதனிலே சோட்டாவாங்
கிகருச்சானவீச்சப்போல்காலேக்காணே. (௭௮௰)

காணவேகால்வாங்கிபக்கஞ்சென்றுகையிலிருந்தசோட்டாவால்
கண்ணேப்பார்த்து, ஊணவேகுதிகாமுகமூஞ்சிதன்னே யுடைத்துவி
டுகிழ்விழுந்துஉதைத்துக்கொள்வான், பேணவேகெருடபட்சி வீச்சு
ப்போலபெருகிநின்றுபிடரியிலேபிலமாய்ப்போடு, தோணவேபொ
ரிகலங்கிசுழன்றுபோவான்துன்மாற்கத்துட்டருக்குத்தொழிலிதாமே

தொழிலானயின்னமொருசூட்சங்கேளு சுகமானகழுகினுடவிச்
சுபோலே, நெளியாமல்நின்று வலங்கொண்டு அந்த நேர்மையுடன்
பொருத்தறிந்துகுருக்கில்போடு, சுழியானசுழிமயங்கி பரதவிப்பான்
சுழியரியாப்பாவிகளைதுடர்ந்துவெட்டு, கெலியாமல்மனதுறைத்துப்
பிலமாய்நிற்ககணபதியைமுன்னிறுத்திதெண்டம்பண்ணே. (௭௮௨)

பண்ணப்பாயின்னமொருசூட்சங்கேளு பதியறியாமூடர்கள்வந்தெதிர்த்தாராகில், நண்ணப்பா அவனெதிரேபுலிபோல்நின்றுநாட்டமுடன்யிடசாரிவலசாரியாக, முண்ணப்பாபின்னாகநின்றுக்கொண்டு முழிப்பரித்துநினைத்தபடிமுட்டலாகும், கண்ணப்பாமுழிப்பாகயெதிர்கொண்டேகில்கலந்துநின்றபடைதனிலேநீஞ்சலாமே. (௭௮௩)

நீஞ்சுவகைதனையறிந்துபிலவான்வந்தால் நிலையானபட்சியுடவிச்சைக்கண்டு, பாஞ்சுநின்றசோட்டாவின்கெதியைக்கண்டு பத்தியுடன்யிருபேரும்பக்கத்தேகி, வாஞ்சல்லியமாகவேதா னொன்றுக்கொன்றுவணக்கமுள்ளவிச்சுமுறைமகிழ்ந்துக்கொள்வார். ஊஞ்சலிடசாரிவலசாரிகண்டுஉருதியுடன்யிருமனதுமொன்றாங்காணே. (௭௮௪)

ஒன்றாமல்கூத்தாட்டமாகநின்று உருமிவெகுசாய்க்குதிக்குமுலகப்பேயை, நன்றுநன்றுநின்றநிலைதன்னிலேதான் நாட்டமுடனிலையறிந்துதட்டிப்போட்டால், குன்றாகத்தானுமூன்று மனப்பேயாகிகுணமாகஉனதுபதம்பணிந்தானானால், பன்றானதொழில்முறையில் ஒன்றுசொல்லிபதியறிவாய்தானிருப்பாரண்ணாவிதானே. (௭௮௫)

அண்ணாவிதானமக்குஆசானென்று அடிபணியாமூடர்கள்வந்தெதிர்த்தாறாகில், விண்ணாட்டஞ்சுழினையிலேதீபம்னோக்கி விபரமுடன்கம்கம்பிறிங்கம்மென்றுதான் முன்னாகத்தான்செபித்துபார்க்கும்போதுமூனைமழுங்கியறிவுகெட்டுமுகமுஞ்சோர்ந்து,கண்ணாணகண்மயங்கிகாலுஞ்சோர்ந்துகட்டிநின்றகத்தகம்போல்முழிப்பான்பாரே. ()

முழிப்பறிந்துகாரியங்கள்செய்துக்கொண்டால் மூதண்டஅண்டவாசுத்தலாகும், செழிப்புடனேமுழிப்பரிந்துமுதுகண்பூட்டிசென்றுவலசாரியிடசாரிகண்டால், சுழிப்புடையதீபந்தான்சுழியில்நின்றுசுழிதிறந்துஅமுர்தரசஞ்சொலிக்கும்பாரு, செளிப்புடையமனதகத்திஅமுர்தங்கொண்டால்நேமமுடன்சிவயோகமநிலைக்குங்காணே.()

நிலைக்கமனமாதியிலேமைந்தாகேளு நிலையானவெள்ளிமலைக்கேகும்போது, மலைந்துருவமத்தியிலேகுகைதானுண்டு மார்க்கமுடனதனிலொருபெரியோர்தானும், கலைக்கதிகமான சிலநூல்கள் பேசிகருணையுடனிருக்கையிலேசென்றேன்யானுஞ், சிலைக்கதிகமகத்தீசர்வாவென்றேதான்தீற்கமுடனுபசரித்துயிருவென்றாரே. (௭௮௮)

இருவென்றுஅமுர்தரசங்கொள்ளும்போது யின்பமுடன்சிலம்படிக்கவகையுஞ்சொல்லி, கருவென்றுபட்சியுடன் விச்சுங்காட்டிகா

ல்பிலமும்புசபிலமுங்கலந்துசொல்லி, திருவென்று மந்திரத்தின்திற் கஞ்சொல்லிசிவகயிலைபொதிகையில்போ யிருநீயென்றார் குருவென் றுபொதிகையில்வந்திருந்துக்கொண்டு, குருவானகருவெடுத்துஆடி னேனே. (எ௯௬)

ஆடினேனதின்பிறகுகோடாகோடி அளவத்தவித்தையெல்லா மாடிக்கொண்டு, நாடினேன்சுழிமுனையில்நாட்டங்கொண்டுநாதாந்த மனோன்மணியைக்கண்டுதேரி, பாடினேன்வெகுகோடி சாஸ்திரங்க ள்பத்தியுடன்கருக்கிடைகள்நன்றாய்த்தோண, தேடினேன்மலைகெவு டுகுகைகள்தோறுஞ் சென்றுதிறம்பெத்துமனம் நிலைத்தேன்பாரே.()

நிலைத்தமனமுறுதியினால்பொதிகைசென்றுநிலைத்ததினால்பொ திகைமுனியானேன்பாரு, பிலத்தரொருசதுரகிரிஅந்தங்கண்டு பிச காமல்நின்றுதவஞ்செய்யும்போது, குலத்தில்முதலானவேதியந்தான ங்கேகூர்மையுடன் யெக்கியத்தில்பாயச்சொன்னார், முளைத்தஅனல் கும்பமதில் பாய்ந்து நின்றேன் முறையறிந்துகும்பமுனி யென்றார் காணே. (எ௯௧)

காணவேயின்னமொருகருவைக்கேளு காடுமலைதன்னில் தவஞ் செய்யும்போது, ஊணவேமிருகாதிவந்துதானால் உத்தமனேஅதுக் குமுயிர்நிலைதான்மைந்தா, பேணவேதலையாகுந்திறமாய்நின்று பில மாகசோட்டாவால்தட்டினக்கால், தோணவேபொறிகலங்கி கண்ணை மூடுஞ்சுத்தமுடன்பின்பொருக்கால்மாட்டிப்பாரே. (எ௯௨)

மாட்டப்பாமிருகமென்றசெந்துக்கெல்லாம்மகத்தானஉயிர்நிலை தான்சிரசுமைந்தா, நாட்டப்பாசிரசிலுயிர் யெங்கேயென்றால் நலமா னகண்ணதுதான்சோதியாச்சு, மூட்டப்பாசிரசிலடிபட்டபோது மு ழிகலங்குமவ்வேளைமுழித்துக்கொள்ளும், ஆட்டப்பாஆட்டமெல்லா ம்அறிவுங்கண்ணும்அதுகுறைந்தாலொன்றுமில்லையெல்லாம்வீணே.

வீணேதான்திரியாமல்மனசோடந்த வேதாந்தபூரணமேகெதி யென்றெண்ணி, கோனேதான்தானவனையுறுதிகொண்டு குறியறிந்து சிவயோகங்குறித்துக்கொண்டால், தானேதான்தானவனே யாருமப் பாசகலவினைதுன்பமெல்லாந்தவறிப்போகும், தேனேதானமுர்தரச பானங்கொண்டுசிவாசிவாசிவச்செயலென்றிருந்துவாழே. (எ௯௪)

மிருகவசியம்.

இருந்துநிலைதானறிந்துயோகஞ்செய்ய யேகாந்தயுலத்தியனேஒ ன்றுகேளு, வரிந்துநின்றமிருகமெல்லாம்வசியமாக மாற்கமுடன்மந்

திரந்தானென்றுகேளு, அருந்தவமாய்ச்சொல்லுகிறேம் நன்றாய்க்கேளு, அக்உக்கென்றுமிக அழித்தியூது பரந்துவரு மிருகமெல்லாம் அசந்துபோகும்பாலகனேசுழிமுனையில்பதிவாய்நில்லே. (௭௯௫)

விஷந்தீரமந்திரம்.

பதிவானவிஷங்களெல்லாந்தீர்வதற்குபாலகனேமந்திரந்தானென்றுகேளு, கெதியானஅட்சரந்தான்-சி-சி-மசி-கசிக்கென்றுஇறுவையுடன்பதினாறுஉருவேசெய்து, மதியானவிபூதியைநீ கடாட்சித்தாக்கால்மகத்தானவிஷங்களெல்லாமாண்டுப்போகும், விதியாளியானநிலைசொன்னேன்மைந்தா வேறுவிதமாயவர்கள்செவிப்பார்தானே.()

செவிப்பதற்குவெகுசுருக்குமைந்தாகேளு சிலமதிலேதான்செபித்துகுடிக்கலாகுந், தவிப்பகலகுளப்பார்வைபாற்கலாகுந் தானினிந்துமந்திரத்தைசெபிக்கலாகுங், குவிப்பானசிலந்திமுதல்விக்கத்துக்குகுணமானவெண்ணெயிலேதியானம்பண்ணு, கவிப்பானவிஷமுதலாய்சிலவிஷங்கள்காணுமல்யோடுதற்குகருவைக்கேளே. (௭௯௭)

தீருநோய்அனுமானம்.

கருவானமூலிகைதான்தும்பைவேந்தன்சடிசானமேனியுடன்மூன்றுங்கூட்டி, உருவானநவாச்சாரங்கொஞ்சம்வைத்து உத்தமனேநசிக்கியந்தநயனத்தாட்டி, பெருவானவிஷங்களதுதலைமேல்கொண்டால்பிறிந்தவுடன்ஓடுமடாபிணமானாலும்,விரிவானபிசாசுமுதல்சன்னிக்கெல்லாம்விபரமுள்ளநசியமதால்விட்டுப்போமே. (௭௯௮)

களிம்பு.

விட்டுவிடயின்னமொருமருந்துகேளு வீச்சானமூன்றுருவாயிலேதான், சட்டமுடனேங்களஞ்சி ரசத்தைவிட்டு சாங்கமாய்சுடுதியொருபடியில்போட்டு, திட்டமுடன்கலசவாய் நன்றாய்மூடி தீற்கமுடன்மண்டலந்தான்சமாதுவைப்பாய், யிஷ்டமுடன்மண்டலஞ்சென்றெடுத்துக்கொண்டுயின்பமுடனசுந்தரியைகல்வத்திட்டே. (௭௯௯)

கல்வமதில்ரசமாளநன்றாயாட்டிகருவானசுடுதியிலேகல கிமைந்தா, சில்விஷமும்பெருவிஷமுந்தீண்டிவந்தால் திருவானவெத்திலையில்பணவிடைதான்பூசி, உள்விஷங்கொண் டேறாமல் திங்கச்சொல்லில்உத்தமனேசிணத்தில்விஷமிறங்கிப்போகும், வல்விஷமாயினின்றாலுமாண்டுபோகுமகத்தானசஞ்சீவிகளும்பிதாமே. (௮௱)

ஆமப்பாகளும்பதனைல்இறந்திதிரும்ஆறுகவெட்டைமுதல்குலைதீருந்; தாமப்பாகுன்மமொடுபவுத்திரங்கள் தருகாதநெஞ்சடைப்பு

மூற்சைவாய்வு,ஓமப்பாகுழம்பதனை உண்ணும்போதில்வுகமுடிந்துகுட்டமெல்லாம்ஓடிப்போகும், சோமப்பாலுண்டுகெதி தன்னல்லமைந்தாசுத்தமுள்ளசத்தியைநீதொழுதுநில்லே. (௮௱௧)

ரசகெந்திமெழுக்கில்வேதைகாண.

நில்லப்பாயின்னமொருசூட்சஞ்சொல்வேன்நிசமாகக்கண்டுதவஞ்செய்துக்கொண்டு, செல்லப்பாகெந்தகமுந்தாரம்ரெண்டுஞ் செம்மையுடன்கறண்டியிலேயிளக்கம்பண்ணி, நல்லப்பாயிளகினபின்ரசத்தைவாருநாட்டமுடன்துருசுபொடித்துடனேசேர்த்து, மெள்ளப்பாகிண்டயிலேஒன்றாய்க்கூட்டிமேன்மையுடன் தானிருக்கும்வீரஞ்சேரே. (௮௱௨)

சேரப்பாவீரமதைவாசிகூட்டிதிறமாகலிங்கமப்படியேசேறு காரப்பாஒன்றாகக்கல்வத்திட்டு கனிவானநாதமதால்கலந்தரைத்து வீரப்பாதானடங்கஅரைத்தபின்பு வேதாந்தநவாச்சாரநீரால்ஆட்டி, நேரப்பாதானாட்டிநின்றபோது நேசமுடன்தங்கரேக்கதனில்சேரே. ()

சேர்த்துநன்றாய்ப்பின்னுமோர்நாதநீரால் செம்மையுடன்தானரைப்பாய்ஆறுசாமங், கார்த்துநன்றாயரைத்துமிகப் பார்க்கும்போது கருணைவளர்பூரணமாய்மெழுகாய்நிற்கும், பார்த்திபனே அம்மெழுகைபரணிசேர்த்துபக்குவமாய்சற்குருவின்பாதம்போற்றி, சாத்தியதோர்வாசியினால்மூலம்பார்த்து சங்கையுள்ளவழிமுறையைச் சாத்தக்கேளே. (௮௱௪)

கேளப்பாமெழுகில்பணவிடைதான்கொண்டு கெணிதமுடன்களஞ்சிவெள்ளிதகட்டில்பூசி, வாளப்பாமேல்கீழுஞ்சாம்பலிட்டு வணக்கமுடன்புடம்போட்டுயெடுத்துப்பாரு, காலப்பாகால்விசைகொண்டேரிமைந்தாகனகமென்றவட்டதுவையென்னசொல்வேன், மேலப்பாஅண்டகேசரியாள்பாதம்விண்ணொளியில்சோதிமயமாகுந்தானே

தானானசெம்புவெள்ளிஒன்றாய்ச்சேர்த்து தண்மையுள்ளமெழுகிலேசாத்திமைந்தா, தானாகமேல்கீழுஞ்சாம்பலிட்டு தண்மையுடன்புடம்போட்டுயெடுத்துப்பாரு, தானாகிநின்றதங்கம் யென்னசொல்வேன்சச்சுதானந்தபூரணமாய்நிற்குந், தானாகத்தானவனாய் தன்னைப்பாரு தன்னைப்பார்விண்ணைப்பார்கண்ணைப்பாரே. (௮௱௫)

பாரப்பாதாம்பூரத்தகட்டிலேதான் பத்தியுடன்மெழுகிட்டுபுடத்தைப்போட்டால், நேரப்பாதாம்பூரம்பழுத்துநல்ல நேர்மையுடன் ஆறேழுவயதாய்நிற்குங், காரப்பாகனகமதைநக்கண்டுநீயுங் காஸ்பதரி

த்திரியாதேகண்ணேனுெக்கி, மேரப்பா அண்டபதந்தன்னேநோக்கவே தாங்கஅண்டமடாதங்கந்தானே. (௮௱௭)

தானுனதங்கமடாதங்கரூபி சகலகலேக்கியானமென்றவாசிரூபி, ஊனுன ஆதாரமூலரூபிஉண்மையென்றபுருவமடாதீபரூபி, வானுன பூரணமாம்அண்டரூபிமகத்தானபேதமுள்ளமவுனரூபி, தேனுன அமுர்தரசமானரூபிசிவசிவாகலேக்கியானரூபிகாணே. (௮௱௮)

காணவேகனகாதியானசோதிகருணேயுள்ளசோதியடாகமலபீடம், தோணவேஅமுர்தரசஞ்சொலிக்கும்பீடஞ் சுத்தமுள்ளவாசிநின்றிருக்கும்பீடம், பூணவேபோதமென்றமவுனபீடம் பூரணமாமனோன்மணிநின்றிருக்கும்பீடம், பேணவேகற்பூரதீபபீடம் பிலமானபீடமடாமூலந்தானே. (௮௱௯)

மூலமென்றஆதாரமூலம்மூலம்முத்தியுள்ளபுருவனடுகுழினேமூலம், ஞாலமென்றகுழினேயிலே மலர்க்கண்சாத்தி நடுவெழுந்ததீபமதைநன்றாய்ப்பார்த்தால், சீலமென்றசிவயோகமுறுதியாகுஞ் செகச்சோதிகாந்தியடாகண்கொள்ளாது, தூலமென்றநயனவொளிக் கப்பால்நின்றுசுயச்சோதியானபிரகாசம்பாரே. (௮௱௰)

நாகவேதை.

பாரப்பாயின்னமொருகருவைக்கேளு பதிவானநாகமதின் வேதைசொல்வேன்,காரப்பானுகமதைசுத்திசெய்துகணக்காகஅந்திடைக்கிருதஞ்சேர்த்து, நேரப்பாதானெடுத்து பொடித்துமைந்தா நேர்மையுடன்கெந்தகமுந்தாரங்கூட்டி, சேரப்பாகரண்டியிலேயிளகப்பண்ணிசேர்ந்துநின்றநாகரசப்பொடியைக்கொட்டே. (௮௱௰௧)

கொட்டிநன்றாய்க்கிண்டியதையெடுத்துக்கொண்டு கூர்மையுள்ளவிரமொடுதுருசுசேர்த்து, திட்டமுடனாதநீர்தன்னுல்மைந்தா செம்மையுடன்கல்வமதிலாட்டும்போது, கட்டிநின்றஅயத்துடனேதங்கஞ்சேர்த்துகருவாகத்தான்பொடித்துகூடக்கூட்டி, சட்டமுடன்சாரநீர்தன்னுல்தாக்கிகருவானநாகமதைஉண்டைபண்ணே. (௮௱௰௨)

பண்ணப்பாஉண்டைகுண்டுமணிபோல்மைந்தா பக்குவமாய்த்தானுணர்த்திசிமிளில்வைத்து,நண்ணப்பாவெள்ளிசெம்புஆறுநாலும்நாட்டமுடன்வுருக்கிவொருஉண்டையீய்ந்தால், கண்ணப்பாதான்துலங்கிசோதிபோலே கனகமென்றதங்கமதை யென்னசொல்வேன், பொன்னப்பாபொன்விளேயுங்கருவைக்கண்டால் பூலோகருசரிஷியாவாய்பாரே. (௮௱௰௩)

பாரப்பாகுடவனிலேபத்துக்கொன்றுபதிவானநாகமணிஒன்று யீய்ந்தால், நேரப்பாகுடவனதுபத்துமாத்தாய்நேர்மையுடன்காணுமடாநினைவாய்ப்பாரு, காரப்பாநினைவாலேகண்ணைப்பார்த்து கண்ணனமனோன்மணியைத்தியானம்பண்ணி, மேரப்பாஅண்டபதங் கண்டாயானால்வேதாந்தசித்தியுள்ளசித்தனாமே. (அாயசு)

அயக்களங்கு.

சித்தமதுநான்துலங்கயின்னமொன்று செயமானவாதமுறைக்கருவைச்சொல்வேன், உத்தமனேமணல்போலேயிரும்பைராவி உருமையுடனதுக்குநிகர்செம்புசேர்த்து, சித்தமுடன்யிருபொடியு மொன்றாய்க்கூட்டிதிறமானகாரநீரதனில்பிசரிப், பத்தமுடன்குகையில்வைத்துருக்கும்போது பாலகனேரெண்டுமொன்றாயுருகும்பாரே. ()

பாரப்பாஅதுக்குநிறைவெள்ளிசேரு பதிவானவெள்ளியதைதங்கஞ்சேரு, நேரப்பாநின்றநிறைதனக்குப்பாதி நீதியுடன்கட்டினதோர்நாகஞ்சேரு, காரப்பாஅஞ்சுமொன்றாயுருகிநிற்குங்கருணையுடன்தானெடுத்துவைத்துக்கொண்டு, சேரப்பாவெள்ளிசெம்பில்பத்துக்கொன்றுதிற்கமுடன் அயக்களங்கைஒன்றுதாக்கே. (அாயசுா)

தாக்கினன்றாயுருக்கிப்பார்மைந்தாமைந்தா சங்கையுள்ளபொன்வயதையென்னசொல்வேன், நோக்கிநின்றமூலமதின்வாசியாலே நுழைந்தேருஆதாரமுடிவிலேதான்,பாக்கியமாய்ஆதாரமுடிவில்சென்றால்பசிதிறஉண்பதற்குபாலுண்டங்கே, வாக்குமனமொன்றாகசோமப்பாலைமனங்குளிரகொண்டுவிடுமயக்கம்போமே. (அாயஎ)

மயக்கமென்றதிரோதகையாள்மாய்கைதீர்ந்தால் மனோன்மணியாளனுதினமுமனதில்நிற்பாள், நயக்கமலமுகனோக்கிமனதாய்ப்பாருநாதாந்தபூரணமாய்வாசியேறும், தயக்கமில்லாமனதாகவாசிகொண்டால்தாண்டலாமண்டவரைசணத்தில்மைந்தா, யியக்கமுடன்மதிதனையேரவியில்சேர்த்துயேகாந்தபூரணத்தில்யிருந்துகாரே.(அாயஅ)

காரப்பாகமலவிழிக்கண்ணுலந்த கருணைவளர்பூரணமாம்உச்சிமீதில், நேரப்பாநேர்ந்துமனதறிவால்நின்றால் நிசமானமதியமுர்தம்நாவிலூரும், பாரப்பாஅந்தமுர்தந்தினமுங்கொண்டு பாலகனேபுருவமதில்பதிவாய்நின்றால், வீரப்பாகொண்டதொருலகிரிதானும் விண்ணடங்கிதன்னறிவுவிளையுந்தானே. (அாயகூ)

தானென்றதன்னறிவேசோதிசோதி சச்சுதானந்தமயமானசோதி, கோனென்றசோதிதனை ஆர்தான்காண்பார்குவிந்தநிலையறியாதகு

ருடர்தானும், வீணென்றஅட்சரத்தை செபித்துக்கொண்டு மேல்வி ழிமறியாமல்விண்ணைநோக்கி, ஊனென்றஉருசையிலேநினைவாய்நிற் பார்யுகமுடிந்தவிடமறியார்உலகத்தோரே. (௮௨௰)

உலகமதுபேருசைபேய்தான்கொண்டுஉன்னுடமையென்னுட மையென்றுகூறிக்கலகமிடுமறிவில்லார்மெத்தவுண்டுகண்டுஅவருட ன்சேரக்கர்மமுண்டு, விலக்கிவிடுகர்மமெல்லாமறிவின்கண்ணால்மெ ய்யானபூரணமேகெதியென்றெண்ணி, பலகலையின்பயனறிந்துநிலையி ல்நின்றால்பார்க்கலாம்முடிந்தவிடம்பதவிதானே. (௮௨௧)

பதமானபதவியடாமூலபீடம் பதிவானபீடமடாஆதாரந்தான், நிதமாகஆதாரபீடந்தன்னில் நீமகனேநின்றுசிவயோகஞ்செய்தால்,ச தமானமுச்சுடருமொன்றாய்நின்றுசாஸ்திரமாங்கமலமதின்நடுவிலே தான், விதமானபிரகாசமென்னசொல்வேன் வேதாந்தபூரணத்தில் மேவிப்பாரே. (௮௨௨)

தாமரை மை.

பார்க்கவேயின்னமொருசூட்சங்கேளு பரமானமூலியடாஆர்தா ன்காண்பார், பேற்கவேசொல்லுகிறேன் புலத்தியாகேள்யிளசானதா மரையின்கொடியைவாங்கி, திற்கமுடனக்கொடியையுணர்த்திநல்ல சிவந்தபட்டுக்குள்ளிருத்திமேலேசுத்தி, சேற்கையுடன்நெய்நனைத்து தீபமேத்திதீபமதால்யெரிந்துஅதுகரியாங்காணே. (௮௨௩)

காணவேகரியெடுத்துகல்வத்திட்டு கருவானயேரண்டத்தயிலத் தாலே, பூணவேயிராறுசாமமாட்டி புத்தியுடன்அதுக்குநிகர்சவ்வா துசேர்த்து, தோணவேமத்தித்துசிமிளில்வைத்து சுத்தமுடன்சற்கு ருவைத்தியானம்பண்ணி, பேணவேபுருவநடுச்சுழினைமீது பிலமான மையெடுத்துதிலர்தம்போடே. (௮௨௪)

போடப்பாதிலர்தமதுபோடும்போதுபூரணமாய்நின்றுமனதறி வால்போட்டால், சூடப்பாகொண்டேநீகண்திறந்து தலைதூரங்கா ணுமடாசுழிகண்ணுட்டம், நாட்டப்பாதூரதிஷ்டிவிபரமெல்லாம்நய னமதில்தோணுமடாநந்திவாழ்வு, தேடப்பாஅவ்வாழ்வுயோகவாழ்வு சிவசிவர்சிவயோகவாழ்வில்நில்லே. (௮௨௫)

நில்லடாபுருவனடுச்சுழியைமேவிநின்றிலங்குங்கற்பூரதீபம்பார் க்க, செல்லடாசென்றுமனேயேறுதற்கு சிவசிவாசத்திசிவபூசைபண்

ணி, உள்ளடாஉள்ளமதுதெளிவாய்நின்று உத்தமனேகாவியத்தினுண்மைதன்னை, சொல்லடாதன்மனமேசாட்சியாக சுத்தமுடன்தானிருக்கச்சோதியாமே. (அ௨௬)

உப்புகட்ட.

ஆமப்பாசோதியென்றஉப்புக்கட்ட அப்பனேகரியுப்புகொண்டுவந்து, தாமப்பாகலசமனையுப்பையிட்டு சங்கையுடன்மேனிச்சாரிணையவிட்டு, ஓமப்பாரவிதனிலேவைத்துக்கிண்டி உப்புநீர்தான்சுவரக்காய்ந்தபின்பு, நாமப்பாசொல்லுகிறோம்பின்னும்விட்டுநாட்டமுடன்பத்துமுறைநன்றாய்க்காச்சே. (அ௨௭)

காச்சிநன்றாய்ச்சிறுகீரைச்சாறுவிட்டு கல்வமதில்தான்மடியநன்றாயாட்டி, மூச்சடக்கவாட்டினபின்னெருக்கம்பாலால் முறையாகமூன்றுவிசைநன்றாயாட்டித், தாட்சியொன்றும்நினையாமல்வழித்துருட்டிசங்கையுடன்ரவிதனிலேகாயப்போட்டு, மாச்சலறக்காய்ந்தபின்புகவந்தன்சாத்தில்மாட்டியனைத்தேயுருட்டிவட்டுப்பண்ணே.(அ௨௮)

பண்ணப்பாவட்டகனைரவியில்போட்டுபாலகனேநீரறவேகாய்ந்துதானால், நண்ணப்பாஓட்டில்வைத்துச்சீலைசெய்து நாட்டமுடன்யெருவடிக்கிப்புடத்தைப்போடு, உண்ணப்பாபுடமாறி யெடுத்துப்பாருஉத்தமனேஉப்பதுதான்கட்டிப்போகும், கண்ணப்பாகண்மணிபோல்கட்டிநின்றகரியுப்பைத்தானெடுத்துகருவைக்கேளே.(அ௨௯)

கருவானஉப்புடனேநாகஞ்சூதங் கம்பியென்றலிங்கமதுகூடச்ர்த்து, உருவானதுருசுடனேயஞ்சுமொன்றாயுத்தமனேகல்வமதிலிட்டுக்கொண்டு, திருவானநாதநீர்தன்னாலாட்டிசெம்மையுடன்தானுருட்டிரவியில்போடு, பருவமுடன்காய்ந்தபின்புஓட்டில்வைத்துபாலகனேபுடம்போடக்குருவாம்பாரே. (அ௩௰)

பாரப்பாகுருவெடுத்துபதனம்பண்ணி பாச்சுவாய்செம்புதனிற்பத்துக்கொன்று, காரப்பாதான்கொடுத்துஉருக்கிப்பாரு களிம்பானசெம்பதுதான்கனகமாகும், வீரப்பாகொண்டதொருகுடவன்தன்னில்மேவினாலாரேழுவயதேயாகுஞ்,சாரப்பாயிவ்வேதையதிகவேதைசணத்திலேசெய்யுகிறவகையாங்காணே. (அ௩௧)

காணுதகாட்சியெல்லாங்காணலாகுங் கருணையுள்ளகாவியத்தைக்கண்டால்மைந்தா, தோணுதசுரூபநிலைதோணுமையா சுத்தமுள்ளவாசியிலேதுலங்கலாகும், பூணுதபூவினுடவமுர்தந்தன்னை புத்தியுட

ன்கண்டறிந்துகொள்ளலாகும், பேணுமலின்னனுாலைவெளிவிட்டாக் கால்பெரிதானசாபம்வந்துபிலக்கும்பாரே. (அ௩௨)

குடவன்வேதை.

பாரப்பாகுடவனுடமகிமைகேளு பக்குவமாய்பித்தளையைத்தக டடித்து, காரப்பாதுருசுகவாச்சாரஞ்சூடன்கம்பிஉப்புகரிசலுப்புஅ ஞ்சுங்கூட்டி, நேரப்பாசாரநீர்விட்டுஆட்டி நேர்மையுடன்தானுருட் டிதகடுள்வைத்து, சேரப்பாஓட்டில்வைத்து புடந்தைப்போட்டால் சிவசிவாகுடவனதுசெம்புமாச்சே. (அ௩௩)

ஆச்சப்பாயிந்தவிதமூன்றுதிரம்போடு அப்பனேகுடவனதுசெ ம்புமாகும். பாச்சப்பாகுடவன்செம்பெடுத்துக்கொண்டுபக்குவமாய் வெள்ளியிலேனுலுக்கொன்று, காச்சப்பாகுடைகயிலிட்டுஉருக்கிப்பா ருகனகமென்றதங்கமதுயெட்டுமாத்து, பேச்சப்பாசலுதியிலேபார்க் கும்வித்தைபிறரோடேசொல்லாதேபிழைத்துப்போவே. (அ௩௪)

அண்டகற்பம்.

பிழைப்பதற்குயின்னமொருகருவைக்கேளு பிலமானகருஞானி யண்டம்வாங்கி, நிலைப்பதற்குதண்ணீரும்ஆவின் பாலும்நேர்மையுட னிருனிருமொன்ருய்ச்சேர்த்து, மலைப்பகலஅண்டமதை அவித்துக் கொண்டுமாற்கமுடனிருகருவுந்தேனில்போட்டு, வளப்பமுடனந்தி சந்திகொள்ளும்போதுமகத்தானதேகமடாயிருக்கும்பாரே. (அ௩௫)

யிருகுமடாயிந்திரியங்கட்டிப்போகும்யேகாந்தவாசியதுஅகலா தையா, உருகுமடாகமலரசஅமுர்தந்தானும் உத்தமனேஉள்ளுணர் ந்துஉணர்வாய்க்கொள்ளும், வருகுமடாசகலகலைக்கியானமெல்லாம் மனதுபரிபூரணமாய் மனதுட்கொண்டால், பெருகுமடாஅறிவுபூர ணமாய்நின்றுபேச்சடங்குஞ்சூட்சமதைப்பேணலாமே. (அ௩௬)

மயிலுடையஅண்டகற்பம்.

பேணவேமயிலுடைய அண்டம்வாங்கி பிலமாகக்கட்டுதற்குவ கையைக்கேளு, காணவேவெடியுப்புயிந்துச்சாரங்கடிதானசூடனுட ன்சருகுகூட்டி, தோணவேஅமுரியிலரைத்துமைந்தா சுகமாகச்ச ந்தனம்போலரைத்துக்கொண்டு, பூணவேமயிலுடையஅண்டம்வை த்துபுத்தியுடநீர்வத்தஅவித்துப்பாரே. (அ௩௭)

பாரப்பாஅவித்தகருஒண்டுமொன்ருய் பக்குவமாய்த்தானுரு கிகட்டிப்போகும், காரப்பாகட்டினதையெடுத்துக்கொண்டு கருணை

வளர்அமுர்தரசபானஞ்சேர்த்து, நேரப்பாதேனதுவுங்கூடச்சேர்த்துநேர்மையுடன்ரவிதனிலேனவனுள்போட்டு, சாரப்பாஅந்திசந்திகொண்டாயானல்சனைதநரம்புவலுவாககெதியுண்டாமே. (௮௩௮)

கெதியானமோட்சகெதி யென்னவென்றால் கேள்மகனேபூமிதனிலிருக்குமட்டுஞ், சதியானபீடையிலேஅழுந்தாமல்தான்சதாகாலப்பூரணத்தில்சார்ந்துக்கொண்டு, விதியானயெழுத்ததிலே மனதைவைத்துவேதாந்தவாசியினல்விண்ணைநோக்கி, பதியானமூலமடாஉச்சிமீதில்பரஞானசோதிகண்டால்மோட்சந்தானே. (௮௩௯)

முப்பாழ்.

தானனமூலமடாஉச்சிமூலம் தன்மையுள்ளவாசியடாசுவாசத்தந்தம்,கோனனகுருவருளால்தியானங்கொண்டுகுவிந்துநின்றவிடமதுதான்முக்கோணம்பார், வானனமுக்கோணம்மயானருத்திரன்மருவிநின்றயிடமதுதான்முப்பாழ்மைந்தா, ஊனனஆதாரங்கண்டுதேறிஉண்மையென்றநடுமனையிலுகந்துநில்லே. (௮௪௰

ரசகற்பூரவைப்புகற்பம்.

உகந்துகொண்டுநிற்பதற்குரசகற்பூர முறுதியுடன்சொல்லுகிறேன்புலத்தியாகேள், வகுந்துநின்றதிரிகடுகுவெந்தயமுமொன்றாய்மாற்கமுடன்வகைமூன்றுவருகன்தூக்கி, பகர்ந்துநின்றமத்தஞ்சார்விட்டனைத்துபாலகனேகுகைபோலபண்ணிக்கொண்டு, சுகந்தமுடன்ரசகெந்திலிங்கமூன்றுஞ் சுத்தமுடன்பொடிப்பண்ணி குகையில்போடே. (௮௪௧)

போடப்பாசட்டிமுக்காலுப்பைக்கொட்டி புத்தியுடனக்குகையைபதியவைத்து, நாடப்பாமேல்சட்டிகொண்டுமூடி நலமாகமண்சீலைவலுவாய்ச்செய்து, சூடப்பாஅனல்மூட்டிஆறுசாமம் துப்பரவாய்தீயெரித்துயெடுத்துப்பார்த்தால், மூடப்பாமூடிநின்றசட்டிமேலேமூற்கமுடன்ரசமேரிபற்பமாச்சே. (௮௪௨)

ஆச்சப்பாபற்பமென்றரசகற்பூரம்அப்பனேபக்குவமாயெடுத்துக்கொண்டு, வீச்சப்பாகிரந்திமுதல்குட்டத்துக்கும்விசையானபவுத்திரமுஞ்சூலைக்கெல்லாம், பாச்சப்பாபணவிடைகால் சக்கரையில்தாஆம்பரக்குமடாசகலவிஷரோகமெல்லாங்,காச்சப்பாபூரமென்றால்ரசகற்பூரம்கண்டவுடன்தீருமடாகருவாய்ப்பாரே. (௮௪௩)

பாரப்பாயின்னமொருசூட்சங்கேளு பவுத்திரகுடோரியென்றமூலந்தன்னை, காரப்பாயிருள்ளிதும்பைவேளை கடுகவேதட்டியதைக

ட்டினக்கால், வேரப்பா அய்த்ததுவும்ஆரிப்போகும்விசையானமருந் திதுதான்பிசகோயில்லே, ஆரப்பா அரிவார்களிந்தமூலி அருமைவெ கு அருமையடா அறிந்துபாரே. (௪௬௪)

சன்னிமுரிய.

பாரானசன்னியதுமுறிந்துபோக பக்குவமாய்சூட்சமொன்றுப கரக்கேளு, நேரானவசம்பதனைநையத்தட்டிநினைவாககஸ்தூரிகூடச் சேர்த்து, கூறானபொட்டணமாய்முடிந்துக்கொண்டுகூர்மையுடன் தானெடுத்துமுகர்ந்துபார்த்தால்,வீறானசன்னியதுமுறியுமைந்தாவெ குசுருக்குசுகசன்னிவிட்டுபபோமே. (௪௬௫)

செம்புசுத்தி.

விட்டுப்போம்செம்பில்நின்றகளிம்பதுதான்மைந்தா விபரமுட ன்துருசுவெடியுப்புறொண்டும், திட்டமுடன்தான்பொடித்துவைத்து க்கொண்டுசெம்புருக்கிதான்குடுத்துயெடுத்துப்பாரு, கட்டிநின்றக ளும்பதுதான்விட்டுநல்லகனகமயமாயிருக்குஞ்செம்புதானும், சட்ட முடனிந்தமுறைவெளிவிடாதே சங்கையுள்ளசெம்புசுத்தி தன்னைப் பாரே. (௪௬௬)

அண்டவாதத்துக்கு.

பாரடா அண்டமென்றவாதந்தீர பக்குவமாய்நாயுருவிவிறைதா னேடே, நேரடாகாதொட்டிவேறுங்கூட்டி நேர்மையுடன்மிளகுவெ ள்வெங்காயஞ்சேர்த்து, காரடாயிதுநாலுமரைத்துக்கொண்டால்சடி தான அண்டமென்றவாதந்தீரும்,சாரடாயிம்மருந்தைவெளிவிடாதே சங்கையுடன்தன்மனதில்சார்வாய்நில்லே. (௪௬௭)

கெற்பமுண்டாக.

நில்லடாயின்னமொருசூட்சங்கேளுநிசமானகாஞ்சுரைவேரின் பட்டை, நல்லடா அரைத்து அதில்வெண்ணைசேர்த்து நன்மையுடன் முழுகினதோர்நாலாநாளில், சொள்ளவேபெண்களுக்குகெற்பமுண் டாக்குணமானமருந்திதுதான்கூர்ந்துபாரு, செல்லடாயிம்முறைதா ன்சூட்சமாகுந்திறமாகச்சண்டறிந்துதீற்கங்காணே. (௪௬௮)

பிறவிநோக்க.

காணடாபிறவியதுனேக்குதற்குகருவாககுண்டையுடன்வாடேவே ர்வாங்கி, பூணடாசற்குருவைத்தியானம்பண்ணிபுத்தியுடன்வள்ளையமி ட்டுமஞ்சள்சாத்தி, பேணடாகால்விரலில்பூட்டினக்கால் பிள்ளையது தான்பிறக்கும்பெருமையாக, தோணடாகண்ணுமனக் கண்ணுலந்த சோதியென்றபுருவமதைசூழ்ந்துப்பாரே. (௪௬௯)

பாரப்பாயின்னமொன்று சொல்வேன்கேளு பரிதானபெறண்டைவேர்கொண்ணைவேறும், நேரப்பாகாடியிலே அரைத்துமைந்தா நீமகனேதான்குடிக்கபிறவினேக்குக், காரப்பாஅதிமதுரம் பொடியேசெய்துகருணையுடன்தேனதிலேகொடுத்துப்பாரு, பேரப்பாபிறவியதுநாளேனேக்கிபிள்ளையுமேசுகமாகப்பெருவாள்பாரே. (௮௰)

அந்திரவாய்வுக்கு.

பாரடாஅந்திரமாம்வாய்வுதிரபத்தியுடன்யின்னமொருகருவைக்கேளு, காரடாபுளியிலையைதுவைத்துமைந்தா கருணையுடன்மூனுபடிதண்ணீர்விட்டு, நீரடாதானுழக்காய்காச்சிமைந்தா நேர்மைநல்லசிரகத்தைஅரைத்துப்போட்டு, பாரடாகுடித்தவுடனந்திரவாய்வுபரக்குமடாயிந்தமுறைபத்திப்பாரே. (௮௰௧)

பத்தியுடன்யின்னமொருபாகங்கேளுப்திவாகசிறுபிளைதுவைத்துச்சாத்தை, புத்தியுடன்தான்குடிக்கவாய்வுநீங்கும் பூரணத்தைப்பத்திமனதறிவாய்நின்று, சத்தியமாய்புருவமதைநித்தம்பாருசதாகாலஞ்சிவயோகந்தண்மைபூணு, சுத்தமுடனந்திசந்திமனக்கண்பூண்டால்சுகமானசித்துவிளையாடலாமே. (௮௰௨)

அண்டவாதத்துக்கு.

ஆடவேயின்னமொருகருவைக்கேளு ஆனகருஞ்சிரகமும்வெள்ளைப்பூண்டும், கூடவேதேனதிலேஅரைத்துக்கொண்டால் சுரூகத்தீருமடாஅண்டவாதஞ், சூடவேயிந்தமுறைசுறுக்குமெத்த சுகராசவயித்தியமென்சொல்லலாகும், தேடவேயிந்தமுறைஅறிதறிதுமைந்தாசித்தர்கள்தான்செய்யுகிறவித்தைதானே. (௮௰௩)

மரித்தபிள்ளைபிறக்க.

தானேதான்மறித்தபிள்ளைபிறவினேக்கதண்மையுடன்னுங்கிழுவையரைத்துமைந்தா, பூனேதான்நல்லெண்ணையில்கலக்கிக்கொண்டால்புண்ணியனேசெத்தபிள்ளைவிழுகும்பாரு, வானேதான்தானவனுய்வடிவுகொண்டு மனங்குவிந்துபுருவமதில் மனையைக்கண்டால், கோனேதான்குடியிருப்பார்மனமொன்றாக குவிந்துநின்றவாசியிலே குணமாய்ச்சேரே. (௮௰௪)

இரத்தகாசந்தீர.

சேரடாரெத்தமென்றகாசமெல்லாந்தீரவதற்குயின்னமொருசெய்கைகேளு, யேரடாசிலைசுட்டசாம்பலோடே யெள்ளுநைவைத்துபொடிபண்ணிகுடிக்கத்திரும, வீரடாகொண்டரொத்தகாசத்துக்குவெகுசுருக்குயிந்தமுறைவினவிப்பாரு, ஆரடாஉனக்குநிகர் வயித்தியமுண்டோஅருமையுள்ளவித்தையடாஅரிந்துபாரே. (௮௰௫)

பீனிசங்களெட்டுக்கு.

பாரப்பாபீனிசங்க ளெட்டுக்குந்தான் பதிவானமருந்தொன்று சொல்லக்கேளு, காரப்பாபேச்சுரைபேய்பீர்குரொண்டில்கருவானவி ரையெடுத்துஅரைத்துமைந்தா, நேரப்பாநல்லெண்ணைதன்னில்காய்ச்சிநீமகனேதலைக்கிட்டுமூன்றுநாள்தான், சேரப்பாநாசியிலேநசியம் பண்ணதீராதபீனிசங்கள்தீர்ந்துப்போமே. (அ௫௬)

பெண்ருதுவாக.

போமப்பாயின்னமொருபுதுமைகேளு பெண்களிலேபுத்தியறியாதிருந்தால், நாமப்பாசொல்லுகிறேன்காணந்தன்னை நாட்டமுடனவித்துநீர்யிறக்கிக்கொண்டு, ஓமப்பாபெருங்காயமுரைத்துக்கொண்டால்உத்தமனேபெண்ருதுவாம்உண்மையாகும், காமப்பால்கானற்பால்கொண்டுநின்று கருவானபூரணத்தைகருவாய்க்காணே.(அ௫௭)

வெட்டைபிரமியங்கள்தீர.

காணவேவெட்டைமுதல்பிரமியங்கள் காரணமாய்தீர்வதற்குமருந்துகேளு, பூணவேதேங்காய்ப்பால்புழிந்துக்கொண்டு புங்கம்வேர்தட்டியதின்பாலுங்கூட்டி, தோணவேஓரிதழ்வெறரைத்துப்போட்டு சுகமாகமூன்றுநாள்குடித்துப்பாரு, பேணவேவெட்டையெல்லாந்தீர்ந்துபோகும் பெரிதானவித்தையடாருட்சந்தானே. (அ௫அ)

குழந்தைசுரத்துக்கு.

தானனகுழந்தைகட்கு சுரங்கண்டாக்கால்தன்னைமயுள்ளரோகிணியும்சீராவேறும், ஊனனசெங்கழுநீர்தன்னுலாட்டிஉத்தமனேமுலைப்பாலில்குடுத்துப்பார்த்தால், வீனனசுரங்களெல்லாம் ஓடிப்போகும்விசையானமூலமடாகிசமாம்வித்தை, தேனனஅமுர்தரசபானங்கொண்டுசிவன்மேலேசிந்தையதாய்தினமுநில்லே. (அ௫௯)

குழந்தைவாந்திக்கு.

தினமானகுழந்தைகட்குவாந்திகண்டால்சிங்கியென்றகலைக்கொம்புதிப்பிலியுங்கூட்டி, இனமாகஅதிவிடையம் கூடச்சேர்த்துயின்பமுடன்பொடிப்பண்ணிதேனில்கொண்டால், கனமானவாந்தியெல்லாம்விட்டுப்போகும்கைகண்டமருந்திதுதான்கருதிப்பாரு, மனதாணமனதறிவோடிருந்துக்கொண்டு மகத்தானசுருதியிலே மனதை நாட்டே. (அ௬௰)

குழந்தைக்குபேதி.

நாட்டமுடன்குழந்தைகட்குபேதிகண்டால்நல்லபுளியாரையுடன்வாழைப்பூவும், தேட்டமுடனென்றுக்கிபிட்டவித்து திறமாகப்பி

ழிந்ததிலேதேனுங்குத்தி, வாட்டமில்லாமருந்துதான்குடிக்கும்போ
துமகத்தானகழிச்சலெல்லாம்வாங்கிப்போகும், தாட்டிகமாய்சற்குரு
வைத்தியானம்பண்ணிதண்மையுடன்புருவமதில்சார்ந்துநில்லே. ()

மூலத்துக்கு.

நில்லப்பாயின்னமொருசூட்சங்கேளுநிசமானகுதிரையுடகுழம்
புச்சிவல், நல்லப்பாமிளகுசுக்குயிந்துப்போடுநன்மையுள்ளப்பழச்சா
த்தில்நன்றாயாட்டி, துள்ளப்பாநின்றதொருமுளையில்பூசிசுருக்கானக
மூதையுடகத்தந்தன்னில், விள்ளப்பாநெருப்பிட்டுபுகையைக்காட்ட
வெகுசுறுக்காய்மூலமதுகரைந்துபோமே. (௮௬௨)

இரத்தமூலத்துக்கு.

போமப்பாயின்னமொருசூட்சங்கேளுபொல்லாதமூலமடாரெத்
தமூலம், நாமப்பாபோவதற்குசூட்சங்கேளு நன்மையுடன்விலாமிச்
சைவேரைவாங்கி, தாமப்பாதண்ணீரில்கிழாயம்பண்ணி சங்கையுட
ன்மூன்றுனாளிருபோதுண்ண, நாமப்பாசொல்லுகிறோம் ரெத்தமூ
லம்நன்மையுடன்றீருமடாதண்மைதானே. (௮௬௩)

தண்மையுடன்யின்னமொருசூட்சங்கேளு தாறுனவிடதலையின்
கொழுந்துவாங்கி, உண்மையுடன்யிடித்துச்சாரொழக்குக்கொண்டா
ல்ஓடுமடாரெத்தமென்றமூலந்தானுஞ், சின்மயத்தைதானினைந்துசி
வமேசெய்தால்தீராதவல்பிணியுந்தீர்ந்துபோகும், நன்மையுள்ளநாட்
டமதாய்நயனம்பாருநாதாந்தமுத்திரையைதினமுனேக்கே. (௮௬௪)

பேய்ச்சொரிக்கி.

நோக்கமில்லாபேய்ச்சொரிக்கிமருந்துகேளு நன்மையுடனிந்
துப்புபொடியாய்ப்பண்ணி, தாக்கடாநெய்தனிலே பொடியைக்கொ
ட்டிதண்மையுடன்கிண்டியதைரவியில்வைத்து, தீர்க்கமுடன்தலைக்
கிட்டுமேலும்பூசிதிறமாகமருநாள்தான்முழுகிப்போடு, தூக்கமில்லா
பேய்ச்சொரிதான்வோடிப்போகுஞ்சுருக்கானமருந்திதுதான்சுகமாய்
ப்பாரே. (௮௬௫)

பாரிசவாய்வுக்கு.

பாரப்பாயின்னமொருசூட்சங்கேளு பதிவானபாரிசமாம்வாய்வு
தீர, நேரப்பாவெள்ளுள்ளிப்பூடுரித்துமைந்தா நிறமானபொன்னிற
மாய்வறுத்துக்கொண்டு, சேரப்பாவிளக்கெண்ணை கொஞ்சம்விட்டு
நிறமானகருப்புட்டிகூடச்சேர்த்து, காரப்பாகிண்டியதைதின்னும்
போதுகனத்திருந்தபாரிசமாம்வாய்வுபோமே. (௮௬௬)

காமாலைக்கு.

போமப்பா காமாலைதீருதற்கு போக்குடனேயெருமையுடசாணி ப்பாவில், நாமப்பா அதினுடையதயிர்தன்னாலே நல்லசீரகமும்வெங் காயங்கூட்டி, தாமப்பா அரைத்துஅந்தப்பாலில்சேர்த்துத் தான்குடி க்கக்காமாலைதணிந்துபோகும், ஓமப்பாஉண்மையுடனன்மையானல் உன்னுடையஅஸ்தமதுவிசேஷமாச்சே. (௬௬௭)

ஒருதலைவலிக்கு.

ஆச்சப்பாதலைவலிக்கிமருந்துகேளு அரகராநாய்ப்பாகல்சாறு வாங்கி, பாச்சப்பாசீலையிலேஊட்டிமைந்தா பருந்திரியாய்தானுருட் டிகாயவைத்து, காச்சப்பாதிக்கொளுத்திஅவித்துநல்லகடிசானபுகை மூக்கில்யேத்தினக்கால், போச்சப்பாவொருதலையில்வலிகளெல்லாம் புத்தியுடனிந்தமுறைபூண்டுபோரே. (௬௬௮)

இருமல்யிளைப்புக்கு.

பாரப்பாயிருமலொடுயிளைப்புத்தீரபதிவானதூதுவளைகண்டங் கத்திரி, நேரப்பாதானிடித்துதூளேபண்ணி நீமகனேதேனிலரைம ண்டலங்கொள், காரப்பாமண்டலமேகொண்டாயானல்கடிதானயிரு மலொடுயிளைப்புபோகும், தேரப்பாகருணையினல்வாசியேறிதிருவா னபூரணத்தில்சேர்ந்துநில்லே. (௬௬௯)

இருமல்யிளை.

சேர்ந்துநின்றயின்னமொருகருவைக்கேளுதிறமானஆதளையின் யிலையைத்தட்டி, பாங்கிபமாய்ரெண்டுபடிநீரில்போட்டு பக்குவமாயு முக்காக்கிக்கொண்டாயானல், சார்ந்துநின்றயிரும்பலொடுயிளைபோகு ஞ்சங்கையுடன்சூரணமுந்தானேகொள்ளு, தீர்ந்துவிடும்நோயறிந்து மருந்துகொண்டால்சிவாயகுருதேசிகனைதியானம்பண்ணே. (௬௭0)

பித்தத்துக்குத்தயிலம்.

பண்ணப்பாபித்தவகைக்கெல்லாமப்பா பதிவாகத்தீர்வதற்குத் தயிலங்கேளு, செண்ணப்பாயிளநீரும்பசுவின்பாலும் திறமானநல் லெண்ணைமூன்றுமொன்றாய், கண்ணப்பாபடியொன்றுபாண்டத்தி ட்டுகடைச்சரக்குமூலமதைக்கருதிக்கேளு, நிண்ணப்பாஅதிமதுரங் குங்குமப்பூகோஷ்டம்கிசமானசந்தணமுமகிலுங்கூட்டே. (௬௭௧)

கூட்டப்பாயேலமுடன்லவங்கந்தானுங் குணமானவிலாமிச்சை நன்னாரிவேரு, நாட்டப்பாவசவாசிநெய்தலோடுநலமானசடாமாஞ்சி

ஙிரும்புதானும, நீட்டப்பாதண்ணிமிட்டாக்கிழக்குகூடநிசமானசெ ண்பகப்பூமுத்தக்காசு, பூட்டப்பாசாதிக்காய்வெள்ளுள்ளி ரோகிணி யும்புதியமுடன்புழுகுகற்பூரங்கூட்டே. (௪எ௨)

கூட்டடாமருந்துவகைகளஞ்சிவிதங்குணமானயிளநீராலரைத் தெடுத்து, நாட்டடாயெண்ணெயுமோகலந்துமைந்தா நலமானசற்கு ருவைத்தியானம்பண்ணி, சூட்டடா அடுப்பேத்திபதத்தைப்பார்த்து சுகமாகதயிலமதை வடித்துக்கொண்டு, நீட்டடாஉச்சிமுதல்பாதந் தொட்டுதீராதபித்தமெல்லாந்தீர்ந்துபோமே. (௪எ௩)

தீர்ந்துபோம்நயனமதில்குளிர்ச்சியாகுந் திறமானகாந்தலொடு வரட்சிகக்கல், சூழ்ந்துநின்றகண்புகைச்சல்நயனரோகஞ் சுகமில்லா வாயூரல்நெஞ்செரிவுகூட, பாங்கிபமாய்த்தீருமடா யிளநீரெண்ணெ பக்குவமாய்ச்செய்துகொண்டு முழுகிவந்தால், சாந்தம்வெகுசாந்த மடாதேகந்தேகஞ்சந்திரன்போல்காந்தியடாதன்னைப்பாரே. (௪எ௪)

பெரும்பாடுவுதிரத்துக்கு.

பாரப்பாபெரும்பாடு உதிரங்கண்டால் பக்குவமாயதற்குமொ ருமருந்துகேளு, நேரப்பாகவுதும்பைகுருவரிசியோடு நேர்மையுட ன்தானிடித்துமாவதாக்கி, காரப்பாபனவெல்லங்கூடச்சேர்த்து கரு ணையுடனுறுனள்கொள்ளும்போது, வீரப்பாகொண்டுநின்றபெரும் பாடெல்லாம்மெய்யாகத்தீருமடாவிண்ணேனுக்கே. (௪எ௫)

நோக்கம்.

நோக்குவதுவிண்ணிறைந்தசோதிதன்னை நூலானகாலறிந்துவா சியேறி, தாக்குவதுகண்ணுமனக்கண்ணுங்கொண்டுதன்னொளியும்வி ண்ணொளியுந்தாக்கிப்பார்த்தால், வாக்கடங்காவிண்ணொளியையென் னசொல்வேன்மகத்தானபூரணமாய்நின்றதையா, மூக்குநுனிசுழினை யடாவாசிவிடுமுத்தியுடன்பிடறிகண்டத்தடியைப்பாரே. (௪எ௬)

அடிபார்த்துமனங்குவிந்தாலண்டங்காணு மண்டமென்றஆதிய டாசோதிசோதி, முடிபார்த்துபத்திநிலைமுன்னேபாரு முன்னறிந்து பின்னுனபிடரிபாரு, குடிபார்த்துகுடியிருந்தகுரம்பைப்பாரு கூற் மையென்றபுருவமதில்குணமாய்நில்லு, படிபார்த்துநடக்கும்வழிசெ ன்றுயானல்பரமகயிலாசவரையேறலாமே. (௪எஎ)

ஏறலாம்வாசியினாலண்டமேவியிருக்கலாங்கேசரியேகெதியென் றெண்ணி, நேரலாங்கைவாசிகுளிகையாலேநிலைக்கலாம் நிலையறிந்து காலையூண, பாலொலாமுனதுகைவசமேயாகும் பத்திகொண்டுகேசரி

யாள்பாதம்னேக்க, கூரலாஞ்சகலகலைதனக்குள்கண்டு குவியலாமன ங்குவிந்துகுறியில்நில்லே. (௮௭௮)

வெள்ளைபாஷாணக்கட்டு.

குறியறிந்துகுணமறிந்துநிலையில்நிற்கக் கூறுகிறேனதுக்குவொருகுணத்தைக்கேளு, நெறியறிந்துவெள்ளையடாபாஷாணந்தான்நிசமானபாஷாணந்தன்னைவாங்கி, அறியரிந்ததாரமுடன் துருசுகூட்டி அப்பனேஅமுரியினலரைத்துக்கொண்டு, துருவறிந்தபாஷாணந்தனக்குமைந்தாசுத்தமுடன்கவசமதுதுலங்கச்செய்யே. (௮௭௯)

வங்கக்கட்டு.

செய்யப்பாகவசமதுநன்றாய்ச்செய்துதிற்கமுடன் காடையொருபுடத்தைப்போடு, மெய்யப்பாபாஷாங்கட்டிப்போகும் விபரமுடன் தானெடுத்துமேலுங்கேளு, பொய்யப்பாபோகாமல்நாதநீரால் புத்தியுடனரைத்துவெள்வங்கத்தப்பி, பையப்பாமண்சிலைவலுவாய்ச்செய்துபதியானபுடத்தில்வங்கங்கட்டிப்போமே. (௮௮௰)

கட்டிநின்றவங்கநிகர்வெள்ளிசேர்த்து கருவாகஉருக்கவெள்ளி ஞெருங்கிப்போகுங், திட்டமுடன்ஞெருங்கினதைக்கல்வத்திட்டுதிரமாகஅதுக்குநிகர்ரசத்தைச்சேர்த்து, தட்டநன்றாய்நாதவிந்துதன்னலாட்டிதண்மையுடன்வழித்துருட்டிரவியில்போட்டு, சட்டமுடன் காடையொருபுடத்தைப்போட்டால்சங்கையுள்ளரசிதவங்கங்குருவாம்பாரே. (௮௮௧)

பாரப்பாகுருவெடுத்துசெம்பிலேதான் பரிவாகதாளுருக்கிபத்துக்கொன்று, நேரப்பாகுடுத்துமுகந்தெளிவைப்பார்த்து நிசமானவெள்ளியடாஅதிகவெள்ளி, காரப்பாவெள்ளியென்றமதியைப்பார்த்துகருவான அம்மதியைரவியில்சேர்த்து, சேரப்பாவாசியென்றகருவைத்தாக்கசிவசிவாவாசியினல்செம்மையாமே. (௮௮௨)

பாஷாணக்கட்டு.

செம்மையுடன்ஞதவிந்துவொன்றாய்க்கூட்டி திருவானகற்பூரமொன்றுசேர்த்து, நன்மையுடன்பாஷாணங்கட்டித்தூக்கி நாட்டமுடன்தீயெரிக்கக்கட்டிப்போகும், தண்மையுடன்கட்டினதையெடுத்துமைந்தாதாம்பூரவெள்ளியுமாய்சேர்த்துருக்கி, உண்மையுடன்பாஷாணம்பத்துக்கொன்றுஉறுதியுடன்தான்குடுக்கவெள்ளியாமே. ()

ஆதியந்தம்நாதவிந்து.

ஆமப்பாவெள்ளிவித்னதயதிகவித்தை அந்தரங்கமானவித்தையாதியாதி, தாமப்பாதன்னிலேயேஆதியாகுஞ் சங்கையுள்ளபூமியடா

அந்தமாகும், ஓமப்பா ஆதியந்தமெங்கேயென்றால் உண்மையுடன் சொல்லுகிறேன்றதவிந்து, வாமப்பால்பொங்கிநின்றதவிந்தால் ம கத்தானபஞ்சகற்தாள்வடிவுமாச்சே. (௮௮௪)

ரவிமதி.

ஆச்சப்பாவிந்துவினல்சதையெலும்புமாச்சு ஆதியென்றநாதம தாலக்கினிவாய்வாச்சு, காச்சப்பாரொண்டுமொன்றாய் கலந்துகூடில்க லந்துநின்றஆகாசவெளியுமாச்சு, மூச்சப்பாதனக்குயிர்தான் வெளி யாய்நின்றமுத்தியுள்ளரவிமதியுங்கண்ணாநின்று, பேச்சப்பாரவிமதி யுமொன்றாய்நின்றபேசாதமவுனமென்றசுழியுமாச்சே. (௮௮௫)

அஷ்டாங்கசூட்சம்.

ஆச்சப்பா அஷ்டாங்கசூட்சங்கேளு அருளாகதிழ்முகமாயிருந்து க்கொண்டு, மூச்சப்பாமூலமென்றவாசியாலே முத்திபெறரோசகபூரக மும்பண்ணி, நீச்சப்பாகும்பகத்தில்மனதைவைத்து நேமமுடன்மசி மசியென்றுருவேசெய்து, காச்சப்பாகருணைவிழிப்பார்வையாலே க ண்குளிரரவிமதியுமொன்றாய்ப்பாரே. (௮௮௬)

பாரப்பாரவிமதியுங்கண்ணில்கண்டால் பாலகனே அபமிருத்து பரந்துபோகும், நேரப்பா அபமிறுத்துவிலகித்தானல்நிலையானவாசி யதுகுலையாதையா, சாரப்பாவாசியதுசார்ந்துநின்றுசகலகலைதனக்கு மொருகுருவாய்நிற்குங், காரப்பாகிழ்த்திசையே சகலத்துக்குங் கரு ணையுள்ளமோட்சமெனக்கருதலாமே. (௮௮௭)

ஆமப்பாதென்கிழக்குதிசையைநோக்கி அருளானவாசிதனையன் பாய்க்கொண்டு, தாமப்பாதன்னிலையைச்சார்ந்துமைந்தா தண்மையு டன்ரோசகபூரகமும்பண்ணி, போமப்பாகும்பகத்தில் மனதைநாட்டி பூரணமாய்வசிவசியென்றுருவேசெய்தால், ஓமப்பாயிருதயமாங்கம லந்தன்னில்உண்மையென்றவன்னிபிரகாசமாமே. (௮௮௮)

ஆமென்றவன்னிபிரகாசமானல் அருளானகமலமதில்தீபந்தோ ணும், ஓமென்றதீபமதின்ஒளிகண்டாக்கால்ஒருகோடிபாவமெல்லாம் உடனேதீரும், தாமென்றதன்னிலையேபிரகாசிக்குஞ் சதாபோதபூர ணமாய்தானேநிற்கும், பூவென்றஆயிரத்தெண்மலருக்குள்ளே பொ ருந்திநின்றபூரணமும்புனிதமாமே. (௮௮௯)

புனிதமுடனீயிருந்துபுருவம்பாருபுத்தியுடன்தானிருந்துபாற்கு ம்போது, மணிதறணறதவொலிசெவியில்கேழ்கு மறலியென்றகூத் துவனுமாண்டுபோவான், கெணிதமென்றவாசியதுகீழோடாது கீழ்

மேலும்நடுவானமுடிமேல்நிற்கும்,பனிதமுள்ளமுடிமேலேவலஞ்செ ன்றக்கால்பாலகனேகண்குளிரபார்க்கலாமே. (௮௬௰)

பார்க்கவேதென்திசையைநோக்கிமைந்தா பதிவானவாசியிலேப ணிந்துக்கொண்டு, யேற்கவேரேசகபூரகமும்பண்ணி யேகாந்தகும்ப கத்தில்மலர்க்கண்சாத்தி, மூற்கமுடன்தானிருந்து மதியைப்பார்த்து முன்னேறிகசிகசியென்றுருவேசெய்தால், திற்கமுடன்மதிகறைந்தா ப்போலேமைந்தா திங்குசெய்யும்பாவிகள்தான்திகைப்பார்பாரே. ()

திகைத்துமனமறந்துமதிகெட்டுப்பின்னுந் தீராதவல்பிணியில் திகைப்பான்பாரு, நகைப்பதற்குஉடம்பெடுத்தபாவிமாரே நாவில் வைத்துப்பேசாதேநயங்காட்டாதே, தகைப்பறிந்துஅமுர்தரசங்குடி த்தோர்தம்மைச்சங்கைகெட்டுபேசினதோர்சவங்கள்தன்னை, புகைப் பறிந்துஉயிருலேஉயிரைவாங்கும் பொல்லாதமாரணமாம் பூண்டுப் பாரே. (௮௬௨)

பாரப்பாபூரணமாய் தன்னைப்பார்த்து பதிவான வாசியினலை ண்டத்தேகி, காரப்பாஅண்டபதக்கெதியென்றெண்ணிகமலமென்ற ஆயிரத்தெண்மலரில்நின்று, நேரப்பாஅந்தமுர்தங்கொண்டுதேறிதி ருநயனசூட்சமதால்தன்னைப்பாரு, நேரப்பாநின்றமனக்கண்ணால்பா ர்த்தால்நின்றுருபமாகாசவெளிதானுமே. (௮௬௩)

ஆமப்பாவெளியேறிவந்தசூட்ச மாரறிவாரக்கினிகோத்திரந்தா ன்மைந்தா, ஓமப்பாஅக்கினிகோத்திரத்தில்வந்தஉண்மையென்றவா சியடாமூச்சேயாச்சு, தாமப்பாதன்னிலையாய்வந்தசூட்சந் தணலான வக்கினியின்ஆவிஆவி, சாமப்பால்கசிந்தொழுகுமாவிதன்னை கண்ட வர்களண்டபதங்காண்பார்காணே. (௮௬௪)

காணவேகன்னிதிசைதென்மேற்காக கருணையுடனத்திசையை நோக்கிமைந்தா, பூணவேவாசியினல்சுழினைக்கேத்தி புத்தியுடன்ரே சகபூரகமும்பண்ணி, தோணவேகும்பகத்தில்நின்றுக்கொண்டு துரு வமுடன்வங்வங்கென்றுருவேசெய்தால், பேணவேசுழினையிலேசத்தி ரூபம்பெரிதானமரகதம்போல்வடிவாம்பாரே. (௮௬௫)

பாரப்பாமரகதம்போல்தன்னைக்கண்டால்பதிவானஅஷ்டசத்தி வசமேயாவாள், நேரப்பாஅஷ்டசத்திவசமாம்போதுநிசமில்லாதேக மதுநிசமாய்ப்போகும், காரப்பாதேகமென்றலார்தான்காண்பார்க லேமதியாய்நின்றதிருவாசிதேகம்,ஆரப்பாஅறிவார்கள்காரணமாந்தே கமருள்ஞானபூரணமாயமைத்தவாழ்வே. (௮௬௬)

அமைந்தபடிமுடிக்குமென்றுசொன்னபேச்சு அப்பனேபுலத்தியனேசொல்லக்கேளு, அமைந்தபோதாதியிலேமூளைத்தசத்த மங்கனையேமாண்டுதென்றுஅறியார்மூடர், அமைந்தசத்தம்பிறந்ததுதான்வெளியிலாச்சு அடங்கியதுபோனதுதான்வெளியிலாச்சு, அமைந்தபடிமுடிக்குமென்றுசொன்னதெல்லாம் அடங்கினதுஒடுங்கினதும்வெளிதான்பாரே. (அகூஎ)

பாரப்பாமேல்திசைதான்வருணன்வீடு பதிவாகமேல்திசையில்மனதைநாட்டி, நேரப்பாவாசியில்சென்றொடுங்கிநின்றுநினைவறிந்துரேசகபூரகமும்பண்ணி, சேரப்பாகும்பகமேகெதியென்றெண்ணிநிற்கமுடன்அம்அம்வென்றுருவேசெய்தால், காரப்பாகால்குவிந்துஅமுர்தமுண்டால்கமலரசஅமுர்தமதைகனிந்துஉண்ணே. (அகூஅ)

உண்ணுவதுபூரணத்தைஉண்ணவேணும்உருமையுடன்வாசியில்சென்றேறவேணும், திண்ணமுடன்வாசியில்சென்றேறியந்ததிருவாளமுச்சுடரைக்காணவேணும், வண்ணமுள்ளமுச்சுடரைக்கண்டுதேரிமகத்தானசோதியிலேமனக்கண்ணாட்டி, விண்ணானகேசரியைக்கெதியென்றேதான்விண்ணாட்டஞ்சுழினையிலேமேவிக்காணே. (அகூகூ)

காணவேகண்கொள்ளாக்காட்சிகாணுங்கண்கண்டகாட்சியாகருணைவீடு, பூணவேபொற்கமலமானவீடுபொருந்திநின்றசோதிதான்நிறைந்தவீடு, பேணவேஅமுர்தரசஞ்சொலிக்கும்வீடுபேர்பெரியவீடதுதான்அண்டவீடு, தோணவேஅவ்வீடேகெதியென்றெண்ணிசுத்தமுள்ளமார்க்கத்தோர்துணிந்தார்காணே. (கூ௱)

காணவேவடமேற்குவாய்வுவீடு கண்டுகொண்டுஅவ்வீட்டைடகனிவாய்ப்பார்த்து. தோணவேவாசிமலர்தன்னால்நீயுஞ் சுத்தமுடன்ரேசகபூரகமும்பண்ணி, பேணவேகும்பகத்திலொளிக்கண்ணாட்டிபெருமையுடன்சிம்சிம்யென்றுருவேசெய்தால், காணவேமூலஅனல்மேலேசாடிகற்மமென்றயிந்திரியங்கருகிப்போமே. (கூ௱க)

போமப்பாகசடானதத்துவங்கள் பொல்லாதவினைகளெல்லாஞ்செந்தீப்பட்டு, தாமப்பாதன்னிலையேசுரூபமாகத் தானவனாய்நீயிருந்துதன்னைப்பாரு. வாமப்பாவுண்டுகெதிதன்னைப்பார்த்தால் மகத்தானசுடரொளிபோல்மனங்கொண்டோடும், ஆமப்பாயிப்படியேஅஷ்டகற்மமடங்குநிலைதன்னையறிந்துஅருளைப்பாரே. (கூ௱உ)

பாரப்பாஅருளானகண்ணாலேநீயும் பதிவானமுதுகண்ணால் தன்னைப்பாரு, காரப்பாகண்ணுமனக்கண்ணாலந்த கருணைவளர் புருவாடு

உச்சிமீதில், யேரப்பாசகலகலைவாசிதன்னால்யேரியந்தபூரணத்திலின்பமானால், வீரப்பாகொண்டதொருவியாதியெல்லாம்வேதாந்தஅக்கினியில்வெந்துபோமே. (௯௩)

வெந்துமனம்நிலைப்பதற்குமைந்தாகேளுவிபரமுடன்வடதிசையைநோக்கிமைந்தா, சொந்தமுடன்வாசியினால்சுழியைக்கண்டு சுத்தமுடன்ரேசகபூரகமும்பண்ணி, பந்தமுடன்கும்பகத்தில்நின்றுக்கொண்டு பாலகனேமங்மங்கென்றுருவேசெய்தால், யெந்தவினைசெய்தாலுந்தீர்ந்துப்போகும் யின்பமுள்ளசோதியைநீயிருத்திப்பாரே. ()

இருத்திமுனைபார்க்கையிலேகண்தான்கூசும் யின்பமுடன்கண்மூடிசுழினைக்கேத்தி, திருத்தமுடன்சுழினையிலேமலர்க்கண்சாத்தில் சிவசிவாபரவெளிதான்யென்னசொல்வேன், பெருத்ததொருபரவெளியிலொளிதானின்றுபேருலகெல்லாம்நிறைந்தசோதியாச்சு, குறித்ததொரு சோதிதன்னைகண்ணால்பார்க்க குருவானஆவியென்ற வாசிபாரே. (௯௫)

வாசிபார்வாசிசிவயோகஞ்செய்யவழியுனக்குத்தெரியாட்டாலேதுசெய்வோம், நேசமுள்ளவாசியடாஅகாரவிந்துநிலையறிந்துவிந்ததனைஉகாரத்தாலே, ஆசுவென்றவாசியினாலமுத்தியூத அங்கனவேவிந்துரசங்கட்டிப்போச்சு, பாசமென்றவிந்துரசங்கட்டிப்போனால் பாயவாமண்டவனாகெவுனந்தானே. (௯௬)

தானானவடகிழக்குமைந்தாமைந்தா சகலரிஷிதேவர்முதல்வாசம்வாசம், கோனானகுருபதத்தைமனதிற்கொண்டு குணமானயீசானதிசையைநோக்கி, ஊனானவாசியினால்தன்னைப்பார்த்து உத்தமனேரேசகபூரகமுமபண்ணி, வானானகும்பகத்தில்மலர்க்கண்சாத்தி மாற்கட்டன்நங்மங்கென்றுருவேசெய்யே. (௯௭)

செய்யப்பாஉருவறிந்துஉருவேசெய்தால்திருவானவாசியதுதிறமாய்நின்று, பையப்பாதேகமதில் நின்றநோய்கள் பருதிகண்டபனிபோலேபரந்துபோகும், மெய்யப்பாதேகமதில்காந்திமீறும் வேதாந்தசுழினையிலேதீபங்காணும், மையப்பாமையமென்றநந்திவீடு மகத்தானசோதிப்பிரகாசந்தானே. (௯௮)

அமுரியுப்புசுன்னம்.

தானென்றஅமுரியுப்புசொல்லக்கேளு சருகானமூலமதையார்தான்காண்பார், ஊனென்றஉருசையடாசருகுவாங்கிஉத்தமனேபுடம்போட்டுசாம்பலாக்கி, தேனென்றஅமுரியிலேசாம்பல்விட்டுதிறமா

கலக்கியதைத்தெளியவைத்து, பூனென்றமனதறிவால்மைந்தாமைந்தாபுத்தியுடன்மூன்றுநாள்தெளிவைவாங்கே. (௯௱௯)

நாதநீர்.

வாங்கியந்தத்தெளிவைமிகநன்றாய்க்காச்ச மகத்தானஅமுரியுப்பையென்னசொல்வேன், பாங்குடனேஅமுரியுப்பை வாங்கிமைந்தாபக்குவமாயதுக்குநிகர்கம்பிகூட்டி, சாங்கமாயதுக்குஅரைகூடஞ்சேர்த்துசாரநீர்விட்டரைத்துவட்டுப்பண்ணி, தாங்கியேரவிதனிலேகாயப்போட்டுசெங்கையுடன்வோட்டில்வைத்துப்புடத்தைப்போடே. ()

நாதநீர்முரிய.

போடப்பாநிதானமதாய்ப்புடத்தைப்போடு புடமாறியெடுத்துப்பார்சுன்னமாகும், தேடப்பாசுன்னமதைபதனம்பண்ணி திருவானநாதநீர்தன்னைவாங்கி, சூடப்பாஅமுரியுப்புசுன்னந்தன்னில் சுகமாகப்பணவிடைதான்போட்டுப்பாரு, நாடப்பாநாதநீர்முரிந்துபோகும் நன்மையுடன்தெளிவதனைபதனம்பண்ணே. (௯௱௰௧)

துரிசுசுன்னம்.

பண்ணப்பாதெளிவதனைபிங்கான்சேர்த்து பசுமையுள்ளதுருசுனுடகட்டிவாங்கி, நண்ணப்பாநாதநீர்தன்னில்போட்டுநாட்டமுடன்ரவிதனிலேவைத்துப்பாரு, விண்ணப்பாரவியனலால் வெளுத்துப்போகும்வெளுத்துநின்றதுருசுனுடகட்டிவாங்கி, நுண்ணப்பாதெளிவதனில்வீரம்பூரந்துணுக்கியிட்டுவெளுத்தகட்டியமுக்கிப்பாரே. ()

பாரப்பாஅமுக்கிநல்லரவியில்போட்டால்பசுமையதுதுருசுவெகுசுன்னமாகும், காரப்பாசுன்னமதைப்பதனம்பண்ணிகருவானசுன்னமதில்விராகனென்று, நேரப்பாவீரமொடுபூரமொண்டும் நிசமாகசுன்னநிறையெடுத்துமைந்தா, சாரப்பாசாரநீர்தன்னாலாட்டி தண்மையுடனதுக்குரொட்டிதாரம்வாங்கே. (௯௱௰௩)

வாங்கியந்ததாரமதில் கவசம்பூட்டி மாற்கமுடன் பூப்புடத்தில்வைத்துப்பாரு, சாங்கமுள்ளதாரமதுயியமாகுந் தயவானயியமதைவைத்துக்கொண்டு, பாங்குபெறவெள்ளிதனில் பத்துக்கொன்றுபக்குவமாய்த்தான்குடுத்துஉருக்கிப்பாரு, தீங்கில்லாவெள்ளியதுபழுத்துப்போகுஞ்சிவசிவாவெள்ளியதுதங்கமாச்சே. (௯௱௰௪)

ஆச்சப்பாசருகுடையசாம்பலொன்று அதுக்குநிகர்ருத்திரனர்சாம்பல்கூட்டி, பாச்சப்பாபூநீருசரியாய்ச்சேர்த்துபத்தியுடனமுரியினல்கரைத்திருக்து, வாச்சப்பாஅடுப்பிலிட்டுயெரிக்கும்போதுமகத்

தானஉப்பதுவையென்னசொல்வேன், மூச்சப்பாஅடங்கிநின்ற உப்பைவாங்கிமுக்கியமுடநீர்வத்தரவியில்போடே. (௯௱௰௫)

போடப்பாரவிதனிலேநன்றாய்க்காய்ந்தால்புத்தியுடன்தானெடுத்துவைத்துக்கொண்டு, நாடப்பாவெடியுப்புகூடனேடே நன்மையுடனதுக்குநிகர்உப்புசேர்த்து, சாடப்பாகல்வமதிலிட்டுக்கொண்டுசாரநீர்தன்னாலேஅனாத்துமைந்தா, சூடப்பாவழித்துருட்டி ரவியில்போட்டுசுத்தமுடன்முன்போலேபுடத்தைப்போடே. (௯௱௰௬)

போட்டபுடமாரவிட்டுயெடுத்துப்பாரு புண்ணியனேயென்னசொல்வேன்சுன்னமாகும், தேட்டமுள்ளசுன்னமதைபதனம்பண்ணிசிவசிவாநாதநீர்தன்னாலாட்டி,நாட்டமுடன்துருசுக்குகவசம்பண்ணிநன்மையுடன்காயவைத்துயெடுத்துக்கொண்டு, வாட்டமில்லாபூப்புடத்தில்வைத்துப்பார்க்கமாசத்தசுன்னமதாய்நீறுங்காணே.(௯௱௰௭)

துருசுசெயநீர்.

காணவேதுருசுநீற் மைந்தாமைந்தா காணரிதுகாணரிது அரிதுமெத்த, பூணவேஅந்தநீர்தன்னேடொக்கபுத்தியுடன்நவாச்சாரங்கூடச்சேர்த்து, பேணவேபிங்கானில்வைத்துப்பாரு பெருமையுள்ளசெயநீராயென்னசொல்வேன், தோணவேபன்னீரை வைத்துக்கொண்டுதொடுகுறிபோலின்னமொருசூட்சங்காணே. (௯௱௰௮)

சூதக்கட்டுமணி.

காணவேசெயநீரின்பெருமைசொல்வேன்காண்டியிலேஅன்னீரைவிட்டுக்கொண்டு, தோணவேசூதம்விட்டுஅடுப்பில்வைத்து சுகமாகத்தீயெரிக்கச்சூதங்கட்டும், பேணவேகட்டினதை யெடுத்துமைந்தாபெருமையுடன்நாலிலொன்றுரோக்குசுத்தி, பூணவேகாரநீர்தனில்பிரட்டிபுத்தியுடன்தானுருக்கமணியுமாமே. (௯௱௰௯)

மணியானமணியதுதான்மைந்தாமைந்தா மகத்தானதம்பனமாங்குளிகையாகும், கனியானகுளிகைதனைவைத்துக்கொண்டுகாலதிந்துவாசியினால்கண்ணைநோக்கி, பணியானரசமணியைநாவில்வைத்துபாலகனேயடக்கியதால்யோகமபார்த்தால்,தனியானஅக்கினிகொண்டுயரயேத்துந்தாயானபூரணத்தைதியானம்பண்ணே. (௯௱௨௰)

தீபம்பார்க்க.

பண்ணப்பாதியானமதுபுருவமேத்தி பரஞானகேசரியைப்பாதம்போத்தி, விண்ணப்பாதானேக்கிகண்ணைப்பாரு மெய்ஞ்ஞானசுழி

ீனயிலேமேவிநில்லு, கண்ணப்பாசுழினேயிலேமேவிநின்றால் கற்பூர தீபமதுகண்ணில்தோணும், முன்னப்பாபின்னாகிமுன்பின்னாகி முத்தியுள்ளதேகமடாசுத்தமாமே. (௬௨௧)

யோகம்பார்க்க.

சுத்தமுடனாதாரந்தன்னைப்பார்த்துசோதிமயமானதொரு உச்சிமீதில், பத்தமுடன்தானிருந்துபதியைப்பார்த்து பதிவானபூரணமே கெதியென்றெண்ணி, சித்தமுடன்தானிருந்துசிவயோகம்பார்சிவசத்தியோகமதையார்தான்காண்பார், நித்தமுமேதன்னறிவால் தானாய்நின்றுநீமகனேஅகாரமுடன்உகாரம்பாரே. (௬௨௨)

அகாரஉகாரமறிய.

பாரப்பா அகாரமுடன்உகாரமென்றும் பதிவானநாதவிந்துகாரசாரம், காரப்பாசாரமுடன்காரம்ரெண்டுங்கருணையுடன்கண்டறிந்துகொண்டுநின்றால், நேரப்பா அண்டபதம்முடிவுகாணும் நிசமானவாசியதுவசமாய்நிற்கும், சாரப்பா அவ்வாசிதன்னிலேதான்தான்தானேயொடுங்கிநிலேதன்னைக்காணே. (௬௨௩)

அமுர்தங்கொள்ள.

காணவேகண்திறந்துவிண்ணைப்பார்த்தால் கமலரசபூரணந்தான்கசிந்துகாணும், பேணவேயமுர்தங்கொண்டுதேறிபிரளாமல்வாசியிலேநின்றுகொண்டு, பூணவேவாய்வேகலகிரிமூட்டிபூரணமாயிருந்துமதிரவியில்சேரு, தோணவேமதிதனையேரவியில்சேர்த்தால் சுகமாகயென்னாளும்வாழலாமே. (௬௨௪)

மதிரவியிற்காண.

வாழப்பாயென்னாளும்வாழ்ந்துக்கொண்டு மார்க்கமுடன்தானிருக்கவரிசைகேளு, காலப்பாகாலானவாசியேறி கருணையுடன்கண்டமதிலங்கென்றெணி, மேலப்பா அண்டகேசரியைக்கண்டு மெய்ஞ்ஞானபோதநிலைதன்னைப்பெத்து, ஆளப்பா அகண்டவெளி கெதியென்றெண்ணி அடிநடுவுமுடிமேலாயமர்ந்துநில்லே. (௬௨௫)

துருசுசுன்னம்.

நில்லப்பா துருசுனுடசுன்னஞ்சொல்வேன் நிசமானகருவங்காரசமுங்கூட்டி, செல்லப்பாவெடியுடனேதுருசுங்கூட்டிசேர்ந்துநின்றகருவங்கமொன்றாய்ச்சேர்த்து, கொல்லப்பாநாதநீர்விட்டரைத்து கூர்மையுடன்வழித்துருட்டிரவியில்போட்டு, கல்லப்பாபோலவுமேகாய்ந்தானால், கருணையுடன்வோட்டில்வைத்துபுடத்தைப்போடே. ()

போடப்பாபுடமாறியெடுத்துப்பாரு பொருமிவெகுசுன்னமதாய்நீறிநிற்கும், நாடப்பாசுன்னமதையெடுத்துமைந்தாநலம்பெறவேதுருசதற்குகவசம்பண்ணி, மூடப்பாஓட்டில்வைத்துபுடத்தைப்போடு முத்தியுள்ளதுருசதுதான்சுன்னமாகும், ஆடப்பாசுன்னமதைவைத்துக்கொண்டுஅப்பனேவேதைமுகம்நன்றாய்க்காணே. (௯௨௭

துருசுசெயநீர்.

காணுதற்குவகைவிபரஞ்சொல்லக்கேளு சருவானதுருசுனுடசுன்னந்தன்னில், பூணுதற்குநவாச்சாரம்நாலிலொன்றுபுத்தியுடன்கல்வமதில்பொடித்துக்கொண்டு, பேணுதற்குபீங்கானில் வாரிவைத்தால்பெருகிவருஞ்செயநீராயென்னசொல்வேன், தோணுதற்குஅந்நீர்தன்னைவாங்கிசுகமாகலிங்கமதில்சுருக்குத்தாக்கே. (௯௨௮)

லிங்கக்குரு.

சுருக்கமுடன்சுருக்கரிந்துசுருக்குத்தாக்க சுத்தமுள்ளலிங்கமதுகட்டிப்போகும், பெருக்கமுடன்கெந்தகமுந்தாரஞ்சேர்த்து பெருகிநின்றசெயநீராலரைத்துமைந்தா, கருக்கறிந்துகட்டினதோர் லிங்கமேலேகவசமதுதான்பொருத்திகாயப்போடு, பிருக்கமுடன்காய்ந்ததின்மேல்சீலைசெய்துயேகாந்தசற்குருவைத்தியானம்பண்ணே. ()

பண்ணப்பாசற்குருவைத்தியானம்பண்ணி பதிவானகவசமதைபுடத்தைப்போடு, விண்ப்பாதானேக்கியெடுத்துப்பார்த்தால் வேதாந்தலிங்கமதுஉருகிநிற்கும், பொன்னப்பாபோலவுமேஉருகிநின்றபுத்தியுடன்லிங்கமணிதன்னைவாங்கி, நண்ணப்பா அபரஞ்சி ரேக்குசுத்திநன்மையுடன்காரமதாலுருக்கிப்பாரே. (௯௩௰)

பாரபபாஉருகிநின்றகுருலிங்கத்தைபக்குவமாய்த்தானெடுத்துபதனம்பண்ணி, சேரப்பாவெள்ளிசெம்புஎட்டுரெண்டுந்திறமுடன்தானெடுத்துஉருக்கிக்கொண்டு, காரப்பாகளங்கானலிங்கந்தன்னைக்கணக்காகப்பத்திலொன்றுபோட்டாலந்த, நேரப்பாநின்றசெம்புவெள்ளிதானும்நிசமானலிங்கமதால்தங்கமாச்சே. (௯௩௧)

ஆச்சப்பாதங்கமயர்தன்னைக்காண அரிதரிதுகோடியிலேஒருவன்காண்பான், மூச்சப்பாமுடிந்தவிடங்கண்டோன்காண்பான் முனையானதீபவொளிகண்டோன்செய்வான், காச்சப்பாகனலறிந்துகனலையுண்டுகால்வாசிகொண்டுசிவயோகிகாண்பான், வீச்சப்பாவெறும்பிலுக்காய்யெடுத்துப்பார்த்து வேசிமகன் வேரெடுத்து விதியென்பானே. (௯௩௨)

விதியானதலைவிதியின் அமைப்பென்றெண்ணி விதியறிந்தூ டெடுக்கவினர்தானும், பதியானபதிதனையேயறியமாட்டான் பாய்ந் தோடவாசிதனைகாணமாட்டான், மதியானகலையறிந்தூரவியில்சேற்க மந்திரகலையறியாதமாற்கத்தோனைக், கெதியாகப்பிடித்திருத்தி அல கில்போட்டுகேசரத்தில்மனம்பொருந்தியிருவென்பாயே. (௬௬௩)

சிஷருக்குச்சொல்ல.

இருவென்றுவாசிநிலைதன்னைக்காட்டியேகாந்தபூரணத்தின்யின் பங்காட்டி, குருவென்றுசொன்னநிலைதன்னைக்காட்டிகூடுறுதியாகசி வபூசைசொல்லி, திருவென்றஞானபோதகமுஞ்சொல்லிசிவயோகபூ ரணத்தின்செயலுங்காட்டி, கருவென்றகாவியமுங்கையிலீய்ந்து கரு வானஞதவிந்துகண்ணைக்காட்டே. (௬௬௪)

கண்ணானகண்ணதுதான்கமலக்கண்ணு கற்பூரசோதிமயமானக ண்ணு, விண்ணானசுழினையடாநந்திக்கண்ணுவேதமயமானபூரணமா ங்கண்ணு, முன்னாகிபின்னாகியெங்குந்தானாய் முத்திகொண்டபோத மடாஅறிவின்கண்ணு, ஒண்ணானகண்ணதுதான்அறிவின்கண்ணேஓ ம்நமசிவாயமதாயுத்துப்பாரே. (௬௬௫)

உத்துமெள்ளஅறிவான கண்ணாலமைந்தா உண்டையென்றநய னவிழிசூட்சம்பார்த்து, சித்தமுடன்தானிருந்துவிண்ணட்டம்பார்தி ருநயனசூட்சமடாசோதிசோதி, முத்தியுள்ளசோதியடாஅறிவானந் தம்முன்னேழிப்பாயுதடாமுதுகண்பார்வை, பத்தமுள்ளபார்வையி லேபதிவாய்நின்றுபாதாதிகேசமுதல்பணிந்துபாரே. (௬௬௬)

நாதநிலர்தம்.

பாரப்பாயின்னமொருசித்துசொல்வேன்பதிவானபுலத்தியனே நன்றாய்க்கேளு, காரப்பாசுயமானசவ்வாதுவாங்கி கன்னிமுதலானரு துறெத்தத்தோடே, சேரப்பாசும்சும்சிங்கென்றுசொல்லிதீற்கமுடன் மந்தித்துசிமிளில்வைத்து, நேரப்பாசற்குருவைத் தியானம்பண்ணி நீதியுடன்புருவமதில்நின்றுகொள்ளே. (௬௬௭)

நின்றுகொண்டுநெத்திநடுகண்ணைப்பார்த்துநிலையானகண்ணறி ந்துநிலர்தம்போட்டு, நின்றுஅந்தவாசியினால்மைந்தாமைந்தாமோசக முமபூரகமும்நினைவாய்ச்செய்து, நின்றுஅந்தபூரணமே கெதியென் றெண்ணிநேர்மையுடன்சிவயோகநிலையில்நின்றால், நின்றதொருவுயி ர்களெல்லாம்வணக்கமாகிநின்பதமேகெதியெனவே சார்வார்காணே.

காணவேயுன்சமுகங்கண்டோர்க்கெல்லாங்கர்மவினைதானகலுங் கடாட்சமுண்டாம், பூணவேபேய்ப்பூதம் பிசாசுக்கெல்லாம்பூரணத் தைக்கண்டவுடனேடிப்போகும், பேணவேதூரதிஷ்டிநடத்தைகா ணும்பின்தோணும்முன்தோணுமெங்குந்தானாய், தோணவேவாசியி னால்மூலம்பார்த்துதுலங்கினால்உன்சமுகங்கண்டிலாரே. (௬௩௯)

கண்டவர்க்குகர்மவினைதீர்ந்துபோகுங் கருத்துடனேகேட்டவர்க் கும்பாவந்தீரும், தெண்டனிட்டுவணங்கிதிருநீறுபெற்றோர்சிவபூஜைச கோடிசெய்ததிறமதாகும்,விண்டதொருமந்திரங்கள்சித்தியாகும்வே தாந்தவாசியதுவிலகாதையா, அண்டகேசரிமாதுவசியத்தாலேஆன உயிர்பயிர்களெல்லாம்வசியமாமே. (௬௪௰)

கருஆமைமைவசியம்.

ஆமப்பாயின்னமொருவசியஞ்சொல்வேன்அண்டரண்டபதங்க ளெல்லாமங்கேகாணும், நாமப்பாசொல்லுகிறோம்புலத்தியாகேள் ந ல்லகருஆமையிலேமூன்றுனமை, ஓமப்பாகுருவருளால்கண்டுதேறி யுருதியுடன்மனதறிவால்கருவைவாங்கி, தாமப்பாசிவந்தபட்டுதன்னா ல்சுத்திசங்கையுடன்நெய்துவைத்துதீபமேற்றே. (௬௪௧)

ஏத்திநன்றாய்கருகிநின்றகருவைப்பார்த்து யின்பமுடன்தானெ டுத்துகல்வத்திட்டு, பார்த்திபனேகாரெள்ளுத்தயிலத்தாலேபதிவாக த்தானட்டிவழித்துக்கொண்டு, போத்தியந்தமையிக்கி நிகர்சவ்வாது சேர்த்துபுத்தியுடன்தானிருந்துதிலர்தம்போட்டால், நால்திசையும் வெகுதூரங்கண்ணோட்டம்பார், நன்மையுடன்மேல்கீழும் நன்றாய்ப் பாரே. (௬௪௨)

பார்க்கயிலேஅண்டவனாநன்றாய்க்காணும் பத்தியுடன்பூமியில் பாதாளந்தோணும்,எற்கவேபாதாளந்தன்னைக்காணில்யிருநிதியமொ ருநிதியாயேகந்தோணுங், சார்க்கவேபெருநிதியையகலத்தள்ளி கயி லாசபூரணமாய்நிதியைத்தேடு, மார்க்கமுடன் கயிலாசநிதியைத்தே டவந்துதடாஅஷ்டாங்கவளமைதானே. (௬௪௩)

வளமையுள்ளமைதனிலேசிம்பால்சேர்த்துமகத்தானபுடரியிலு ம்நெத்திமேலும், நல்மையுடன்மையெடுத்துதடவிக்கொண்டு நாடுவ லஞ்சுத்திவரஆருங்காணார், தலமையுடனார்காணதேதென்றாக்கால்ச ங்கையில்லாசிம்பால்தன்நன்மைநன்மை, யிளமையுள்ளசிம்பால்தன் பெருமைசொல்லயென்னாலேமுடியாதுயேகாந்திதானே. (௬௪௪)

தானென்றயேகாந்தி அதிககாந்தி சங்கையில்லாபூமா துதந்தகாந்தி, ஊனென்றதேகமது காந்திகாணும் யுத்தசிவசத்தியுடன் காந்தியாகும், வானென்றகாந்திதனையார்தான்காண்பார் மக்களேமனதறிவால் மனதுபூண்டு, கோனென்றகுருவருளால்காணவேணுங் கொள்கிநின்றவாலரசவிந்துதானே. (௬௪௫)

விந்துத்திலர்தம்.

விந்துநிலைதனையறிந்துவிந்துவாங்கி மெய்ஞ்ஞான யிந்திரமாங் கோபப்பூச்சி, அந்தமுள்ளபூச்சியிலேவிந்தைப்பாச்சியவையடக்கமாகவேநீயரைத்துக்கொண்டு, சொந்தமுடன்அதுக்குநிகர் சவ்வாதுசேர்த்துசுகமாகபரணிதனிலடக்கஞ்செய்து, பந்தமுடன் சற்குருவைத்தியானம்பண்ணி பரஞானகேசரியில்திலர்தம்போடே. (௬௪௬)

போடப்பாதிலர்தமதுபோடும்போது பூரணமாய்சற்குருவைத்தியானம்பண்ணி, நாடப்பாவிபூதியுத்தளமாய்ப்பூசி நாதாந்தமையெடுத்துதிலர்தம்போட்டு, தேடப்பாசாபநிவாரணத்தைமைந்தா தேடி மிகஉருசெபித்துதிறமாய்நின்றால், வீடப்பாதானிருக்குமாண்பெண்ணெல்லாம்வேண்டியேயுனதுபதம்பணிவார்காணே. (௬௪௭)

பணிந்துமிகநிற்போர்கள்கோடாகோடிபார்த்தாட்டங்கொள்வார்கள்கோடாகோடி, கனிந்துவலஞ்சுத்துவர்கள்கோடாகோடிகருணையுள்ளமாவிளக்கோகோடாகோடி, அணிந்துபொங்கல் தானிடுவார் கோடாகோடிஅன்புடனேதோத்தரிப்பார்கோடாகோடி, தொனிந்துசங்குனதஞ்செயகண்டிநாதம்துலங்குமடாஉன்சமுகஞ்சுருதிதானே.

தானகஉன்சமுகங்கண்டோர்க்கெல்லாஞ் சகலபிணிவல்விஷமுந்தானேபோகும், கோனனைகுருபதமேகெதியென்றெண்ணி குணமாகசாபநிவாரணத்தைச்செய்து, ஊனனைதேகமடாகெட்டிகெட்டி ஒருகோடிமந்திரமுஞ்சித்தியாகுந், தேனனைஅமுர்தரசஞ்சித்தியாகுந் திருவாணவாசிநிலைதீர்க்கம்பாரே. (௬௪௯)

பாரப்பாதீபமென்றவாசியாலே பதிவானமுக்கோணசிகாரவீட்டில், காரப்பாநிலையானவன்னிவீட்டைக்கண்ணுமனக்கண்ணதினல் கார்த்தாயானல், நேரப்பாஅந்தவன்னிமுடிமேற்சென்று நிலையானசுழினையிலேசோதியாச்சு, சாரப்பாஅறிவானசோதிதன்னைச் சார்ந்து அண்டகேசரியைத்தானேகாணே. (௬௫0)

நவக்கிரகசக்கரம்.

காணவேநவக்கிரகஞ்சக்கிரமாகக் கருணையுள்ளஅனுக்கிரகங்கண்தான்மைந்தா, பூணவேகண்ணுமனக்கண்ணாலந்தபொருந்திநின்றவாசிதன்னைசுழினைக்கேத்தி, தோணவேநவக்கிரகபூசைபண்ணிசுத்தமுடன்தானவனாய்நின்றுதேற, பேணவேமானதமாம் பூசைகேளு பெரிதானபூசையடாமவுனந்தானே. (௯௫௧)

மவுனமென்றபூரணமேதெய்வந்தெய்வ மகத்தானபூரணமேகெதியென்றெண்ணி,தவமுடனேநவக்கிரகம்நன்றாய்ச்சொல்வேன்தானரேகைஒன்பதொன்றுநேரோகீறி, நவமாகஅவ்விதமேகுருக்கேகீறி நாலஞ்சுவீடுமெண்பத்தொன்றுமாச்சு, சிவமானவீடுமெண்பத்தொன்றுக்குள்ளேசேர்ந்துநின்றநவபீசஞ்செப்பக்கேளே. (௯௫௨)

கேளப்பாரவிபீசங்கம்மென்றிட்டு கிருடையுள்ளமதிபீசஞ்சிம்மென்றிட்டு, வாளப்பாசெவ்வாய்தான்டம்மென்றிட்டுவளமானபுதனதுதான்தம்மென்றிட்டு, நாளப்பாவியாழமதுரம்மென்றிட்டு நலமானவெள்ளியடாலம்மென்றிட்டு, சூளப்பாசனிபீசம்அங்கென்றிட்டு சுகமானராகுஉம்மென்றுபோடே. (௯௫௩)

போடப்பாகேதுவடபீசந்தானும்பூரணமாம்ஒங்கென்றுபோட்டுதீர்ந்தால், கூடப்பாநவக்கிரகமொன்பதுக்குஞ்சுத்தமுள்ளபீசமடா உயிருமாச்சு, நாடப்பாஉயிரான யெழுத்தைமைந்தா நன்மையுடன்தானெழுதிகட்டினாக்கால், வீடப்பாநவக்கிரகதோஷமெல்லாம் விலகுமென்றுவேதியனும்விளம்பினாரே. (௯௫௪)

விளம்புமொழிதனையறிந்துமைந்தானானும்விபரமுடன்நவக்கிரகம்நன்றாய்ப்பார்த்து, நலம்பெறவேநவக்கிரகம்ஒன்பதுக்கும் நடுவானஅனுக்கிரகமுடிவில்நின்று, வளமபெறவேவாசியினால்முடிவிலந்த மகத்தானவனுக்கிரகங்கண்டபோது, குழம்பியதோர்நவக்கிரகஞ்செம்மையாச்சுகுருவானஅனுக்கிரகந்தன்னைப்பாரே. (௯௫௫)

தன்னைப்பார்ஆதாரமானசூட்சந்தருவானசூட்சமடாஅஞ்செழுத்துமாச்சு, முன்னப்பாஅஞ்செழுத்துதன்னோடொக்கமுத்தியுள்ளசத்திமூன்றெழுத்துங்கூட்டி, விண்ணப்பாவெட்டெழுத்துதிட்டமாகவிபரமுடன்தான்செபித்துநிலையில்நின்றால், கண்ணப்பாதான்துலங்கிமுதுகண்ணோடேகலந்துநின்றசோதிவெகுசோதிதானே. (௯௫௬)

சோதியென்றகண்ணறிந்துசூட்சம்பாருசூட்சமுடன்வாசியிலேதுலங்கிநில்லு, ஆதியென்றவாசியிலேதுலங்கிநின்றால் ஆதாரமூலம

தினடுக்குத்தோணும், நீதியுடனுதாரமடுக்கைக்கண்டுநிலையறிந்துகூ டுகிறவழியைக்கண்டு, ஓதியதோர்மந்திரகலைகூட்சங்கண்டு ஒடுங்குநி லைதனில்வாசியூணிக்கானே. (௯௫௭)

சோடசமெழுகு.

வேணிமனம்நிலைப்பதற்குமைந்தாகேளுஉருதியுடன்நாகரசவங் கமூன்றும், பேணியேஒன்றாகசேர்த்துமைந்தா பெரிதானகல்வமதி லிட்டுக்கொண்டு, ஆணியாய்கெந்தகமூக்துருசுந்தாரம் அரிதானவீர முடன்பூரஞ்சேர்த்து, பாணியாய்வெள்ளையுடகெவுரிலிங்கம் பத்தியு ள்ளமனோசிலையும்பொன்னிமிளைகூட்டே. (௯௫௮)

கூட்டுவாய்துத்தமிறுதாறசிங்கி கூர்மையுள்ளஅரப்பொடியுஞ் சுத்திபண்ணி, நாட்டுவாய்பதினாறுமொன்றாய்க்கொண்டு நாதாந்தபூ ரணநீர்தன்னாலாட்டி, வாட்டுவாய்ரவிதனிலேவளித்துவைத்து மாற் கமுடன்பின்னுமமைதசாரநீரால், சூட்டுவாய்மைபோலே நன்றாயாட் டிசுகமாகபத்துமுறையரைத்துக்கானே. (௯௫௯)

காணவேநவாச்சாரமொன்றுகூட்டிகமலரசமூலைப்பாலால்கனி வாயாட்டு, பூணவேஒன்றாகஆட்டும்போது புதுமையென்னசொல்வ னடாமெழுகாய்நிற்கும், பேணவேயம்மெழுகைப்பதனம்பண்ணி பி லமானமுக்கண்ணைபேணிக்கொண்டு, தோணவேவயிரவற்குப்பூசை பண்ணிசுத்தமுடன்குருபூசைசுகமாய்ச்செய்யே. (௯௬௰)

செய்ததொரு சோடசமா மெழுகுதன்னை திற்கமுடன்பணவி டைதான் யெடுத்துக்கொண்டு, கொய்ததொரு களஞ்சிவெள்ளித் தகட்டில்பூசிகூர்மையுடன்சாம்பல்வைத்துபுடத்தைப்போடு, கைத வாறப்புடமாறி யெடுத்துப்பார்த்தால் கனகமயமானசெயல் யென்ன சொல்வேன், சைதன்னியமானகுருதன்னைப்போத்திச் சதாபோதநி ஷ்டையிலேதானேநில்லே. (௯௬௧)

தானானசோடசமாமெழுகிலேதான் சகலசரக்கத்தனையுமாண்டு ப்போகும், ஊனானவம்மெழுகில்பூரணத்தைச்சேர்த்தாலுண்மையெ ன்றவேதையதுகண்கொள்ளாது, கோனானவேதியன்சொல்முறைதா னப்பாகுருமொழிதப்பாமல்மனங்கொண்டாயானால், வானானஅண் டகேசரியாள்பாதம்மவுனமுள்ளபோதமதாய்வணங்கிக்காரோ.(௯௬௨

சாரப்பாகாலறிந்துகால்மேல்கொண்டு கமலரசபூரணத்தைபா னம்பண்ணி, நேரப்பாபுருவனடுசுழினைபார்த்துநின்றிலங்குங்கற்பூர திபந்தன்னில், சாரப்பாசார்ந்துஅந்ததீபத்தோடேசதாபோதபூரண

மாய்நின்ருயானல், ஆரப்பாவுனக்குநிகராருமில்லே அப்பனேபூரண த்தைவணங்கிநில்லே. (௬௬௩)

வணக்கமுடன்வாசியிலேமனக்கண்ணூட்டி. மகத்தானஅண்டப தவடிகைக்கண்டு, யிணக்கமுடன்யிருசுடருமொன்ருய்க்கூட்டி யே காந்தபுருவனடு சுழியைப்பார்த்தால், தனக்குளறிவானதிருசோதி பாதஞ்சதாபோதபூரணமாய்தானேநின்று, மணக்குமலர்ச் சகஸ்திர மாம்மலருக்குள்ளேமகத்தானபூரணத்தைமருவிக்காணே. (௬௬௪)

நாதவிந்துமெழுகு.

காணவேநாதவிந்து மெழுகுசொல்வேன் கைமுறையாய்நாத மதில்விந்துசேர்த்து, பூணவேரவிபீசமொன்ருய்க்கூட்டி புத்தியுட ன்ரவிதனிலேகாயப்போடு, தோணவேரவிதனிலே காய்ந்துதானுல் சுத்தமுடன்பூரணமும்ரவியுங்கூட்டி,பேணவேசுத்தசலந்தனில்கழ த்துபின்பொருக்காலிட்டுரவிமுகத்தில்வைவயே. (௬௬௫)

வைப்பாயிந்தமுனைபத்துவிதஞ்செய்தால் வணக்கமுள்ளமெ ழுகாகுமைந்தாகேளு, கைப்பாகைமுறையாய் பாகஞ்செய்து கரு ணையுடன்தானெடுத்துவைத்துக்கொண்டு, மெய்யப்பாதவருமல் கு ருவைப்போத்திவேதாந்தமெழுகில்பணவிடைதான்கொண்டால்,செ ய்யப்பாசெய்தவத்துக்குறுதியாகுஞ்செயமானநாதவிந்துமெழுகைச் செய்யே. (௬௬௬)

லவணமெழுகு.

செய்யவேயின்னமொருகருவைக்கேளு திருவானலவணமதின் மெழுகைச்சொல்வேன், பையவேசத்தியுப்புதன்னேவாங்கிபாலகனே அதுக்குநிகர்சூடன்சேர்த்து, நையவேதண்ணீரா லரைத்துமைந்தா நன்மையுள்ளபுத்தோட்டில்நன்ருய்விட்டு,தொய்யவேரவிதனிலேகா யப்போட்டால்துஞ்சியதுமெழுகுபதமாகுங்காணே. (௬௬௭)

காணவேமுன்போலேயின்னுஞ்செய்து கருணையுள்ளமெழுகதி லேவிட்டுமேலும், தோணவேரவிதனிலேபாகம்பண்ணிசுகமாகப்பத் துமுறைநன்ருய்ச்செய்தால், பேணவேசத்தியுப்பை யென்னசொல் வேன்பிலமானமெழுகாகும்பேணிப்பாரு, பூணவேபூரணமும்ரவியு ஞ்சேர்த்துபுத்தியுடன்தண்ணீரால்கழத்துவாங்கே. (௬௬௮)

கழத்ததொருபூரணத்தை மெழுகில்விட்டுக் கருவைெொண்டு மொன்ருகக்கலந்துமைந்தா, உரத்துடனேதண்ணீரால் கழத்துநல்

லஉண்மையென்றரவிதனிலேஉலர்ந்துதானால்,திறந்துடனேமெழுக துவையென்னசொல்வேன் சிவசிவாகாயாதிகற்பமாச்சு,பரத்துடைய கற்பமதைமைந்தாகேளுபாலகனேபணவிடைதான்கொண்டுபோரே.

பாரப்பா அந்திசந்திகொண்டுதேர்ந்தால்பதிவானசதைகரம்புயி ருகிப்போகும், நேரப்பாவாசியதுநிலையில்நிற்கும்நிலையானபுருவமதி ல்தீபங்காணும், காரப்பாதீபமதினுருதியாலேகைலாசபூரணமாய்வா ழலாகும், தேரப்பாலவணரசமெழுகைக்கொண்டு தேகவச்சிரகாயம தாயிருக்குங்காணே. (௬௭௰)

பூரணமெழுகு.

காணவேபூரணத்தின்மெழுகைச்சொல்வேன்கமலசத்திசாகரத் தினமுர்தம்வாங்கி, பூணவேனுதவிந்துகூடச்சேர்த்து புத்தியுடன்ர விபீசமொன்றாய்க்கூட்டி, பேணவேகல்வமதில்நன்றாயாட்டிபெரிதா னபீங்கானில்வழித்தெடுத்து, தோணவேரவிதனிலேவைத்துநல்லசு த்தமுள்ளகலசப்பால்கூடச்சேரே. (௬௭௧)

சேர்த்துமிகரவிதனிலேகாயக்காயதிருவானகலசப்பால்விட்டுக் கிண்டி, பார்த்திபனேதினந்தோறும்விட்டுக்கிண்ட பசுமையுள்ளமெ ழுகதனையென்னசொல்வேன், சாத்தியதோர்முன்செய்த மெழுகிர ண்டுந்தண்மையுடன்மூன்றுமொன்றாய்சேர்த்துக்கொண்டு, மூர்த்தி கரமாவதற்குகலசப்பாலேமுழுகவிட்டுரவிதனிலேகாயப்போடே. ()

போடப்பாநவனுள்தான்ரவியில்போட்டால் பொன்னனமெழு கதுவையென்னசொல்வேன், சூடப்பாமெழுகெடுத்துபதனமாக சுக மானபீங்கான்றன்மேருக்கேத்தி, நாடப்பாதினந்தோறும் பூசைபண் ணிநாதாந்தவேதரசமெழுகில்மைந்தா, விடப்பாபிலப்பதற்குதினந் தான்மைந்தாமேன்மைபெறபணவிடைதான்கொண்டுகாரே.(௬௭௩)

காரப்பாமெழுகில்பணவிடைதான்கொண்டால்கருணையுடனதி ன்பிலத்தைசொல்லக்கேளு, நேரப்பாநின்றதொருவாதபித்தம் நிலை யானஅய்யத்தால்யெழுந்தநோய்கள், வீரப்பாகொண்டதொருகுன்ம வாய்வுவெந்துநின்றகுட்டமொடுமகோதரங்கள், சீரப்பாபவுத்திரங்க ள்அண்டவாய்வுதீராதவெடிசூலேலிங்கப்புத்தே. (௬௭௪)

புத்தானலிங்கமுடன்யோனிப்புத்துபொருமிநின்றவெடிசூலைய ண்டச்சூலேச்சத்தானபெரும்பாடுகிறுச்சினங்கள்சங்கையில்லாவெகு நோய்கள்தானேதீரும், சித்தானமெழுகுவெகு அருமைமைந்தாதிர

மானஅரிவதனுல்செய்யவேணும், பத்தாசைகொண்டுவெருபதிவாய்ச்செய்தால்பாலகனேதேகவச்சிரகாயமாமே. (௱௭௫)

ஆமப்பாகாயமதில்பித்தநீர்கள்அடங்காதவாதநீர்மேகநீர்கள்,நாமப்பாசொல்லுகிறேரும்மெழுகுகொண்டால் நாதாந்ததேகவச்சிரகாயமாகும், தாமப்பாஅறிவுபூரணமாய்நிற்குஞ்சகலநிருமயமானசோதிகாணும், ஓமப்பாஅஷ்டாங்கயோகத்துக்கும் யுண்மையுள்ளமெழுகிதுதான்நன்மைகாணே. (௱௭௬)

நன்மையுள்ளநாட்டமதாயிறுக்கவேணும் நாதாந்தஅமுர்தரசங்கொள்ளவேணும்,யுண்மையுடன்வாசியிலேவொடுங்கவேணுவுருமையுடன்புருவமையம்பார்க்கவேணுங், தண்மையுடன்புருவமையச்சோதிபார்த்துச்சதாகாலம்பூரணமாயிருக்கவேணுஞ், சின்மயமேதன்மயமென்றருளைப்பெத்துசிவசிவாசிவயோகத்திறத்தைப்பாரே. (௱௭௭)

பாரப்பாஆதியோடந்தம்பார்த்து பதிவானமுக்கோணநீங்காரத்தில், காரப்பாகருணைபெறநின்றுக்கொண்டு கமலமென்றசுழினையிலேகண்ணேட்டம்பார், நேரப்பாசுழினையிலேபிரகாசந்தான் நிகரில்லாசோதியடாகண்கொள்ளாது, சாரப்பாசோதிசிவபாதம்தன்னில்சதாகாலம்பூரணமாய்தானேநில்லே. (௱௭௮)

நில்லடாநிலையறிந்துகமலக்கண்ணைநிசமானவாசியினலண்டமேவி, நில்லடாஅந்தநிலைசொந்தமாக நின்றுமனக்கண்ணதினல்தன்னைப்பார்த்து, நில்லடாநின்தேகம்சோதிபோலே நின்றிலங்கும்புருவனடுஉச்சிமீதில், நில்லடாஅந்தநிலைவாசிகொண்டுநிரந்தரமுந்தன்வசமாய்நீதான்காணே. (௱௭௯)

காணவேகண்கொள்ளா காட்சிகாணும் கருணையுள்ளகாவியத்தைக்கண்டபோது, பூணவேவாசியதுநிலைநின்றுடும் பூரணமுங்காரணமும்பொருந்திப்போகும், தோணவேதானிருந்து விண்ணைநோக்கிசுருதிமயமானசுழிதன்னைப்பாரு, ஊணவேசுழிதனிலேமனக்கண்வைத்துயுருதியுடன்சோதியைநீயுத்துப்பாரே. (௱௮௰)

உத்துமனதறிவாலேதன்னைப்பாரு வூடாடும்வாசியிலேயுகந்துநில்லு, புத்தியுடன்பூரணமேமெய்யென்றெண்ணி பொருந்திநின்றரவிமதியைசுழினைக்கேத்தி, சித்தியுடன்சிவயோகத்திருந்துக்கொண்டால்சிவசிவாசுத்தசிவமயமதாச்சு, பத்தியுள்ளமூலமதின்வாசியாலேபரமகயிலாசவளாக்காணலாமே. (௱௮௧)

காணவேகண்ணின்மலர்தன்னிலேதான்கசிந்தொழுகுமமுர்தரசத்தேனைவாங்கி, பூணவேமதியமுர்தரசத்தைமைந்தா புத்தியுடன்தான்கலந்துவிண்ணைநோக்கிப், பேணவேமானதமாய்ப் பூசைபண்

ணிபிலத்தபுத்தியறிவாலேபானங்கொண்டா, லூணவேஉன்னுடம்பு கெட்டியாகுமுத்தகலைக்கியானமென்றவாலையாச்சே. (கூஅ௨)

ஆச்சப்பாவாலைரசஞ்செந்தியாகும்அந்தரசஞ்சோதியடா அருள் ஞானத்தீ, நீச்சப்பாநிலையாநசெந்திக்குள்ளே நிலைத்துமனதறிவா லேவாசியேறி, மூச்சப்பாதானிருத்தி அண்டஞ்சுத்திமுத்திதருஞான கேசரியைக்கண்டால், பேச்சப்பாபிசகாதுபேச்சேசத்தம்பிலமானச த்தமடாநாதந்தானே. (கூஅ௩)

நாதமென்றசெந்தியில்மைந்தா மைந்தா நன்மையுடன்விந்துவெ ன்றவாய்வுசேரில், போதமென்றவாதமதுக்குயிருமாச்சுபூரணமேதா னவனைக்காணலாச்சு, வேதமென்றவேதமடா ஞானதேரூபிவேதாந்தசோ தியடாவொளிகண்பார்வை, நீதமுடன்அந்தநிலைபார்வையாலேநீம கனேசிவயோகம்நன்றாய்ப்பாரே. (கூஅ௪)

பாரப்பாமனுவேந்தராசபுத்திரா பத்தியுள்ளபுலத்தியமா ரிஷி யேகேளு,நேரப்பாவுனக்குறுதிநன்றாய்ச்சொல்வேன்நெடுவானில்ரா குடனேகேதுரெண்டுஞ், சாரப்பாஅக்கினியும்வாய்வுமாகிசந்திரற்கு ஞ்சூரியற்குந்தானேதானாய், வீரப்பாகொண்டவற்குபகையுமாகி வி ண்ணில்நின்றகதிர்மதியைமறைத்தார்காணே. (கூஅரு)

கிரணம்.

காணவேராகதுவுங்கதிரில்நின்றான் கதித்தெழுந்தகேதுவுமே மதியில்நின்றான், பூணவேயிருவர்களும்நின்றமாற்கம்புத்தியுடன்சொ ல்லுகிறேன்சுத்தமாக, ஊணவேராகதுவும்அம்மாவாசிஉதையமதில் சூரியனைமறைத்திருந்தார், தோணவேபவுரணையில்கேதுதானுஞ்சுத் தமுடன்சந்திரனைமறைத்தார்தானே. (கூஅகூ)

தானாகத்தானவனாய்மறைந்துநின்று சணப்போதில்தான்விலகி க்கானேதானாய், மானாகேள்தொட்டுவிட்டமாற்கந்தன்னை மகத்தான வேதியன்தான்மறையோர்க்கீய்ந்தார், காணாமலந்திரத்தில்மறைந்து நின்றகணக்கரிந்துவணக்கமுடன்கருணைகூர்ந்து, ஊனானதேகமதில் மைந்தாமைந்தாஉருதியுடன்ரவிமதியையுத்துப்பாரே. (கூஅஎ)

ருத்திரகாயத்திரி.

உத்துமெள்ளரவிமதியைப்பார்க்கும்போதுஉண்மையுள்ளகிரு ணமதின்வகைதான்தோணுஞ், சித்தமுடன்தானறிந்து கிருணதோ ஷந்திருதற்குருத்திராகாயத்திரிகேளு,பத்தியுள்ளரகசியமிதுமவுனவி த்தைபாலகனேகெவுனதிசெபிக்குமாற்கஞ், சுத்தமுடன்சொல்லுகி றேன்ஓம்சிறீங்றீங்சுகமாகமசிமசிநசிமசியென்றேதிப்பாரே. (கூஅஅ)

ஓதுவதுநூத்தெட்டுஉருவேசெய்தா லுத்தகலைரவிமதியில்நின்
றதோஷஞ், சாதகமாய்நீங்கிவிடுமைந்தாமைந்தா சதகோடிமந்திரமு
மிதுக்கொப்பல்ல, நீதமுள்ளருத்திரகாயத்திரிதானும் நிச்செயமாய்
தன்வசமேசித்தியாக, போதமுடன்சொல்லுகிறேன் மைந்தபாரு
புத்தியுடன்சித்திபெறபுதுமைகேளே. (௬௮௯)

கேளப்பாஓமவளர்குண்டஞ்செய்து கிருபையுடனலாசு சமித்
தைவாங்கி, சூளப்பாகுண்டமதிலதீவளர்த்துசுத்தமுடன்பசுவின்நெ
ய்வாங்கிமைந்தா, மேலப்பாகுருபதத்தில்மனதைவைத்து வேதாந்த
ருத்திரகாயத்திரிசொல்லி, ஆளப்பாநூத்தெட்டுஆகுதியேசெய்ய ஆ
தியென்றருத்திரகாயத்திரிசித்தே. (௬௯௰)

சித்தமுடன்சித்திபெறயிதுவேமூலஞ்செகத்தோற்குயிந்தமுனா
செப்பாதேகேள், பத்தியுள்ளமந்திரங்கள்பலிக்கவென்றால்பாலகனே
யிந்தமுறைஓமம்பண்ணு, சுத்தமுடன்சதகோடிமந்திரமெல்லாஞ் சு
ருக்காகத்தன்வசமேசித்தியாகும், புத்தியுடன்சித்தமதா யிருந்துக்
கொண்டுபூரணமாயஷ்டாங்கயோகம்பாரே. (௬௯௧)

பாரப்பாஅஷ்டாங்கயோகஞ்செய்ய பதிவானயெக்கியத்தால்மந்
திரசித்தி, ஆரப்பாஅறிவார்கள்கோடிக்கொன்று அறிந்துநிலைபெத்த
வனேராசயோகி, காரப்பாகமலமலர்க்கண்ணாலந்தகண்ணறிந்து உன்
னிநடுஉச்சிமீதில், சாரப்பாமனக்கண்ணால்பூசைபண்ண சதாகோடி
சூரியன்போலொளிதான்காணே. (௬௯௨)

காணுதகாட்சியெல்லாங்காணலாகுங்கருணைவளர்காவியத்தைக்
கண்டபோது, தோணுதுஒன்றுமில்லையெல்லாந்தோற்றுஞ் சு[illegible]மு
ள்ளகிரந்தமடாவேதவாக்கியந், தானாகத்தனித்திருந்துவேதம்பாருத
ன்மயமேசின்மயமாய்தானேகாட்டும், வீணாகத்திரியாமல்தன்னைப்பா
ருவேதசிம்மாசனபதியாய்விளங்குவாயே. (௬௯௩)

விளங்கிநின்றவேதகாவியத்தைமைந்தா வேதமயமாமெனவேபூ
சைபண்ணி, களங்கமில்லாமனதாகயிருந்துக்கொண்டு காப்பேடுங்க
டையேடும்நன்றாய்ப்பாரு, உளங்கனியநன்றாகப்பார்த்துவந்தா லுத்
தமனேஆதாரமூலந்தோணு, மிலக்குமணிபீடமடாமகுடரொத்தினம்
யிருசுடரிநடுவானமூலம்பாரே. (௬௯௪)

விஷ்ணுகாயத்திரி.

பாரப்பாமூலமுதலாறுதாரம்பார்த்துமேலாதாரபதியில்நின்று
காரப்பாபிரமகாயத்திரியொன்றுகருணைவளர்விஷ்ணுகாயத்திரியொ
ன்று, நேரப்பாருத்திரகாயத்திரியொன்றுநிசமானகாயத்திரிமந்திரங்
கள்மூன்றுஞ், சாரப்பாருத்திரகாயத்திரியோதசகலவிஷரேகமெல்
லாமசாந்தமாமே. (௬௯௫)

ஆமப்பாவிஷ்ணுகாயத்திரியோத அப்பனே சந்தானசவுபாக்கியங்கள், தாமப்பாஒன்றுப்த்தாய்தானேயுண்டாஞ் சங்கையுடன்பிரம காயத்திரியோக, ஓமப்பாசகலகலைக்கியானமெல்லாம்உண்மையுடன் அஷ்டாங்கசித்தியாகும், நாமப்பாசொன்னகாயத்திரிமூன்றும் நாதாந்தநயனமடாசத்தியமாமே. (சுசுசா)

நூல்பார்க்க.

சத்தியமாய்காவியத்தைநன்றாய்ப்பாரு சகலகலைஆயிரத்தியிருநூறும்பார், புத்தியுடன் பூரணமீராருநூறும் புகழான தத்துவமுமனுவிக்கியானம், புத்தியுள்ளவெகுநூல்கள்லெக்கோயில்லைபுண்ணியத்தால்கிட்டுமடாநன்றாய்ப்பாரு, சித்தமுடன்தானிருந்துதன்னைப்பாருசிவசிவா விண்ணைப்பார்கண்ணைப்பாரே. (சுசுஎ)

கண்ணைப்பார்மனக்கண்ணால்விண்ணைப்பாற்க கருத்துனக்குயில்லையடாகாலைப்பாரு, தன்னைப்பார்காலறிந்துகால்மேல்கொண்டுதன்மயமாய்நின்றகேசரியைப்பாரு, விண்ணைப்பார்த்தண்டகேசரியைக் கண்டால்வேதாந்தகலைக்கியானமுடிவுகாணும், மண்ணைப்பார்க்கண்ணைப்பார்விண்ணைப்பாருமனதுபரிபூரணத்தின்வடிவைப்பாரே. ()

பாரப்பாபூரணமேகெதியென்றெண்ணிபலகாலம்வாசியிலேபதிவாய்நில்லு, காரப்பாவாசியிலேபதிவாய்நின்றுகாவியத்தின்காப்பேடுங்கடையேடும்பார், தேரப்பா அடிமுடியும்நன்றாய்ப்பார்த்தால் திறமானநடுவீடுபதவிதோணும், நேரப்பாநடுவானசொந்தவீட்டை நீமகனேயறிவதனால்நன்றாய்ப்பாரே. (கூசுசு)

பார்க்கவேயண்டரண்டபதங்கள்தோணும்பரஞானகேசரியும்வசமேயாவாள், யேற்கவேஅவள்பதமேகெதியென்றெண்ணியிருகதிருமொருகதிராய்யேகங்கொண்டு, மாற்கமுடன் அடிநடுவுமுடிமேல்சென்றுமகத்தானபுருவமதில்சோதிபார்த்தால், தீற்கமுடன்தன்மயமும்விண்மயமுங்கூடிசிவசிவாவொண்டுமொன்றாய்சிவமாம்முற்றே. (சூ)

முத்தானசிவமதுவேஆத்துமாவாகும் முழங்கிநின்றநாதமடாசோதியாகும், சித்தானசித்ததுதான் அறிவானந்தம் சின்மயமாய்நின்றதுவேவிந்துவாகும், வித்தானவித்ததுதான்ஒளிகண்பார்வைவேதாந்தபூரணமேதான்தானாகும், பத்தானதிசைதீட்சை தன்னிலேதான் பத்தியுடன்தானறிவாய்பதிவாய்முற்றே. (ஆக)

பூரணகாவியம் - ஆ.

முற்றுப்பெற்றது.